# பெரும் பாவங்கள்

M.M. அப்துல் காதிர் உமரி

---

- கொலை
- சூனியம்
- தொழுகையில் அலட்சியம்
- நோன்பை விடுதல்
- ஹஜ்ஜு செய்யாமை
- பெற்றோரைத் துன்புறுத்தல்
- உறவை துண்டித்தல்
- விபச்சாரம்
- ஆண் புணர்ச்சி
- வட்டி
- அனாதைகளின் சொத்தைச் சாப்பிடுதல்
- அல்லாஹ்வின் மீதும் ரசூலின் மீதும் பொய்யுரைத்தல்
- யுத்த களத்திலிருந்து ஓடுதல்
- அநீதமான நடத்தல்
- பெருமை
- பொய்ச்சாட்சி கூறல்
- மது அருந்துவது
- சூது
- கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லல்
- வழிப்பறி
- பொய்ச்சத்தியம்
- அநீதி இழைத்தல்
- தகாத உணவு
- தற்கொலை
- பொய்
- கெட்ட நீதிபதி
- அதிகாரியின் இலஞ்சம்
- ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் வேஷமிடுதல்

- ஆகாததை ஆகுமாக்குபவன்
- சிறுநீர் கழித்த பின் சுத்தம் செய்யாமை
- முகஸ்துதி
- கற்ற கல்வியை மறைத்தல்
- சதி செய்தல்
- நன்மைகளைச் சொல்லிக் காட்டுதல்
- விதியைப் பொய்யாக்குதல்
- கோளுரைத்தல்
- திட்டுதல் (சபித்தல்)
- வாக்கு மாறுதல்
- சோதிடனை உண்மைப்படுத்தல்
- கணவனுக்குத் துரோகமிழைத்தல்
- உருவம் தீட்டுதல்
- ஒப்பாரி வைத்து அழுதல்
- கொடுமை செய்தல்
- வரம்பு மீறுதல்
- அயல்வீட்டாரைத் துன்புறுத்தல்
- பரிகாசம், புறம் பேசல்
- மமதையும், தற்பெருமையும்
- ஆண்கள் பட்டும், தங்கமும் அணிதல்
- அல்லாஹ்வுக்கன்றி அறுத்தல்
- அந்நியனைத் தகப்பனாக ஏற்றல்
- மேலதிக நீரைத்தடுத்தல்
- அளவை நிறுவைகளில் மோசடி செய்தல்
- அல்லாஹ்வின் சோதனையில் அவநம்பிக்கை வைத்தல்
- அல்லாஹ்வின் நேசர்களைத் துன்புறுத்தல்
- தனித்துத் தொழுதல்
- மரண சாசனத்தின் மூலம் தீங்கிழைத்தல்

## கொலை

எவனேனும் ஒருவன், ஓர் இறை நம்பிக்கையாளனை வேண்டுமென்றே கொலை செய்துவிட்டால் அவனுக்கு உரிய தண்டனை நரகமே ஆகும். அதில் நிரந்தரமாக அவன் தங்குவான். அல்லாஹ் அவன் மீது கோபம் கொள்கிறான். இன்னும், அவனைச் சபிக்கிறான். அல்லாஹ் அவனுக்காக மாபெரும் வேதனையையும் தயாரித்துள்ளான். (அல்குர்ஆன் 04:93)

அன்றியும், அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு நாயனைப் பிரார்த்திக்கமாட்டார்கள். இன்னும், அல்லாஹ்வினால் விலக்கப் பட்ட எந்த மனிதரையும் அவர்கள் நியாயமின்றிக் கொல்லமாட்டார்கள், விபச்சாரமும் செய்யமாட்டார்கள் - எனவே, இவற்றைச் செய்கிறவர் தண்டனை அடைய நேரிடும்.

மறுமை நாளில் அவருடைய வேதனை இரட்டிப்பாக்கப்படும். இன்னும், அதில் இழிவாக்கப்பட்டவராக நிரந்தரமாகத் தங்கிவிடுவர்.

ஆனால், (அவர்களில் எவர்) பாவமீட்பு வேண்டி இறைநம்பிக்கையும் கொண்டு, நற்செய்கைகள் செய்கிறார்கள் - அவர்களின் பாவங்களை அல்லாஹ் நன்மையாக மாற்றிவிடுவான். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்போனாகவும், மிக்க கிருபையுடையோனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 25:68-70)

இதன் காரணமாகவே, நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ, பூமியில் ஏற்படும் குழப்பத்தை (த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ, அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். மேலும், 'எவரொருவர் ஒரு ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்' என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள் இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கிறார்கள். (அல்குர்ஆன்: 5:32)

உயிருடன் புதைக்கப்பட்ட பெண் (குழந்தை) வினவப்படும்போது -

''எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது?" என்று (அல்குர்ஆன் 81:8-9)

அல்லாஹ் குர்ஆனில் கொலையின் கொடுமை பற்றி கூறுகிறான். அழிவின் பால் உங்களை இட்டுச் செல்லக்கூடிய ஏழு பெரும் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்ற நபிமொழியில் மூன்றாவதாக இடம் பெறுவது, நியாயமின்றி ஒருவனைக் கொலை செய்வது என்பதாகும். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ

அவர்கள் அல்லாஹ்வுடன் வேறொருவரையும் நாயன் என்று அழைக்க மாட்டார்கள். (அல்குர்ஆன் 25:68)

என்ற குர்ஆன் வசனத்தை நபியவர்கள் ஓதிக் காட்டினார்கள். நூல்கள்: திர்மிதீ, நஸாயீ

இரண்டு முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் வாளுடன் சண்டை செய்தால், கொல்பவனும் கொல்லப்படுபவனும் நரகத்திலேயே இருப்பார்களென நபி(ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டவுடன், அல்லாஹ்வின் தூதரே! கொல்பவன் நரகத்திற்குப் போவது முறைதான் கொல்லப்படுபவனுமம் ஏன் நரகத்திற்குப் போக வேண்டும்? எனக் கேட்கப்பட்டது கொல்லப்பட்டவனும் தன் சகோதரனைக் கொல்லும் எண்ணத்துடன் தானே சண்டையிட்டான்? என நபி(ஸல்) அவர்கள் விடையளித்தார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அஹ்மத்

தங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பகைமை, உலக விவகாரம், தலைமைத்தனம் இவைகளுக்காகச் சண்டையிடும் முஸ்லிம்களுக்குத்தான் இந்த நபிமொழி எச்சரிக்கையளிக்கிறது. தற்காப்புக்காக,

அல்லது தன் குடும்பத்தின் மானத்தைக் காப்பதற்காக, அல்லது திருடனைத் தாக்குவதற்காக வாளை ஏந்தும்போது ஒரு முஸ்லிம் நரகவாதியாகமாட்டான் என இமாம் அபூ சுலைமான் விளக்குகிறார்கள்.

சிலரின் கழுத்தைச் சிலர் வெட்டிக் கொல்லும் காஃபிர்களாக எனக்குப் பின்னால் மாறி விடாதீர்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

விலக்கப்பட்ட இரத்தத்தைச் சிந்தாமலிருக்கும் வரை (கொலை செய்யாமலிருக்கும் வரை) தன் மார்க்கத்தில் விசாலமாக (மகிழ்வுடன்) இருப்பான் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா

ஒரு விசுவாசியைக் கொலை செய்வது இவ்வுலகம் அழிவதை விட அல்லாஹ்விடம் பயங்கரமானதாகும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: முஸ்லிம், திர்மிதீ, நஸயீ, பைஹகீ, இஹ்பஹானீ, இப்னுமாஜா

அல்லாஹ்வுக்கு இணைவைத்தலும், கொலை செய்வதும், பொய்ச் சத்தியம் செய்வதும் பெரும்பாவங்களில் உள்ளவையாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், நஸயீ

ஒவ்வொரு கொலை நடைபெறும் போதும் அதன் பாவத்திற்குச் சமமாக, முதல் கொலையைச் செய்த ஆதம்(அலை) அவர்களின் மகனுக்கும் பாவத்தில் பங்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

எவன், பாதுகாப்பளிக்கப்பட்டவனைக் கொன்றானோ அவன் சுவர்க்கத்தின் வாடையைப் பெற்றுக் கொள்ளமாட்டான் சுவர்க்கத்தின் நறுமணம் நாற்பது வருடத் தொலைவுக்கு வீசிக் கொண்டிருக்கும் (புகாரீ) எனவும்,

எவன், பாதுகாப்பளிக்கப்பட்டவனைக் கொன்றானோ அவன் அல்லாஹ்வின் பாதுகாப்பை மீறியவனாகிறான், சுவர்க்கத்தின் வாடையை அவன் பெற்றுக் கொள்ளமாட்டான் சுவர்க்கத்தின் ஐம்பது (வருட) கால தூரம் வரை வீசிக் கொண்டிருக்கும். நூல்: திர்மிதீ

மனமுரண்டாக ஒரு விசுவாசியைக் கொலை செய்த குற்றத்தையும், முர்தத்தாக (மதம் மாறி) இறந்த குற்றத்தையும் தவிர, ஏனைய குற்றங்களை அல்லாஹ் மன்னிக்கக் கூடும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அபூதாவூத், நஸயீ, ஹாகிம், இப்னுஹிப்பான்,

## சூனியம்

---

ஸு லைமானுடைய ஆட்சியின்போது ஷைத்தான்கள் ஓதிவந்த (சூனியமான) வற்றையே அவர்கள் பின்பற்றினார்கள். ஆனால், ஸு லைமான் (ஒருபோதும் சத்தியத்தை) மறுத்தவர் அல்லர். ஷைத்தான்கள்தாம் (சத்தியத்தை) மறுப்பவர்கள். அவர்கள்தாம் மக்களுக்குச் சூனியத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். இன்னும், பாபிலோனில் ஹாரூத், மாரூத் என்ற இரண்டு வானவர்களுக்கு இறக்கப்பட்டதையும் அவர்கள் பின்பற்றினார்கள். ஆனால், எவருக்கேனும் அவர்கள் சூனியத்தைக் கற்றுக் கொடுக்க நேரிட்டால், நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம். எனவே நீங்கள் இறைமறுப்பை மேற்கொள்ளவேண்டாம் என்று எச்சரிக்காமல், அதைக் கற்றுக் கொடுக்கவில்லை. அப்படியிருந்தும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பிரிவை ஏற்படுத்தும் (சூனியச்) செயலை அவர்களிடமிருந்து கற்று வந்தார்கள். இருப்பினும் அல்லாஹ்வின் அனுமதியின்றி அவர்களால் எவருக்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படுத்த முடியாது. தங்களுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடியதையும், எவ்வித நன்மை

தராததையுமே அவர்கள் கற்றுக் கொண்டனர். மேலும் அ(ச்சூனியத்)தை விலைக்கு வாங்கியோருக்கு மறுமையில் எவ்விதப் பயனுமில்லை என்பதை அவர்கள் நன்றாக அறிந்தே இருக்கிறார்கள். அவர்கள் தங்களின் உயிர்களை விற்றுப் பெற்றுக் கொண்டது மிகக்கெட்டது. இதை அவர்கள் அறிந்திருக்க வேண்டாமா? அல்குர்ஆன் 2:102

அழிவின்பால் உங்களை இட்டுச் செல்லக்கூடிய ஏழு பெரும் பாவங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள் என்ற நபி மொழியில் இரண்டாவது இடத்தைப் பெறுவது சூனியமாகும். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ

மூலம் சுவர்க்கம் நுழையமாட்டார்கள் மதுவில் மூழ்கியிருப்பவன், உறவினரை வெறுப்பவன், சூனியத்தை உண்மைப்படுத்துபவன் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், ஹாகிம், இப்னுஹிப்பான், அபூயஹ்லா

உமர்(ரலி) அவர்கள், வஃபாத்திற்கு ஒரு வருடத்திற்கு முன், முஸ்லிம் ஆட்சியிலுள்ள கவர்னர்களுக்கு சூனியக்காரனையும், சூனியக்காரியையும் கொல்லும்படி உத்தரவிட்டார்கள் என பஜாலதிப்னு அப்தா அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: புகாரீ

சூனியக்காரனுக்குரிய தண்டனை அவனை வாளினால் வெட்டுவதாகும் என ஜு ன்துப்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல்: திர்மிதீ

மந்திரித்தலும், தாயத்துக் கட்டுவதும், நூல் கட்டுவதும் ஷிர்க்காகும். நூல்கள்: அஹ்மத், அபூதாவூத், இப்னுஹிப்பான், ஹாகிம்

## தொழுகையில் அலட்சியம்

ஆனால், இவர்களுக்குப்பின் (வழிகெட்ட) சந்ததியினர் இவர்களின் இடத்திற்கு வந்தார்கள் அவர்கள் தொழுகையை வீணாக்கினார்கள் (இழிவான மன) இச்சைகளைப் பின்பற்றினார்கள் (மறுமையில்) அவர்கள் (நரகத்தின்) கேட்டைச் சந்திப்பார்கள். (அல்குர்ஆன் 19:59)

இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால், தம் தொழுகையில் அலட்சியமாகவும் இருப்போர். (அல்குர்ஆன் 107: 4,5)

இறைநம்பிக்கையாளர்களே!! உங்கள் செல்வமும், உங்களுடைய மக்களும் அல்லாஹ்வின் நினைப்பைவிட்டும் உங்களைப் பராமுகமாக்கி விட வேண்டாம் - எவர் இவ்வாறு செய்கிறாரோ நிச்சயமாக அவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள். (அல்குர்ஆன் 63:9)

மறுமையில் முதலாவதாக மனிதரிடம் தொழுகையைப் பற்றித்தான் கேள்வி கேட்கப்படும். தொழுகை ஒழுங்காக நிறைவேற்றப்பட்டிருந்தால் வெற்றியடைந்த பாக்கியவானாவான். தொழுகையில் குறைபாடுள்ளவன் நஷ்டமடைந்த துர்ப்பாக்கிய வானாவான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா, அஹ்மத்

''உங்களை ஸகர் (நரகத்தில்) நுழைய வைத்தது எது?" (என்று கேட்பார்கள்) அவர்கள் (பதில்) கூறுவார்கள் ''தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை. ''அன்றியும், ஏழைகளுக்கு நாங்கள் பொய்யாக்கிக் கொண்டும் இருந்தோம். ''(வீணானவற்றில்) மூழ்கிக் கிடந்தோருடன், நாங்களும் மூழ்கிக் கிடந்தோம். ''இந்த நியாயத் தீர்ப்பு நாளை நாங்கள் உணவும் அளிக்கவில்லை. ''உறுதியான

(மரணம்) எங்களிடம் வரும் வரை (இவ்வாறாக இருந்தோம்“ என்று கூறுவர்). எனவே, சிபாரிசு செய்வோரின் எந்த சிபாரிசும் அவர்களுக்குப் பயனளிக்காது. (அல்குர்ஆன் 74: 42-48)

என அல்லாஹ் கூறியுள்ளான்.

எங்களுக்கும், அவர்களுக்கும் (கா∴பிர்களுக்கும்) இடையில் உள்ள வித்தியாசம் தொழுகையாகும். எவன் தொழுகையை விட்டானோ அவன் கா∴பிராகி விட்டான். நூல்கள்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா, இப்னுஹிப்பான், ஹாகிம்)

எனவும்

ஒரு அடியானுக்கும் கு∴ப்ருக்குமிடையிலுள்ள வித்தியாசம் தொழுகையை விடுவதாகும். (தொழுகையை விட்டவன் கு∴ப்ரில் இணைந்தவனாகிறான்.) நூல்கள்: அஹ்மத், முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா, இப்னுஹிப்பான், ஹாகிம், தப்ரானீ எனவும்,

எவனுக்கு அஸருத் தொழுகை தவறி விடுகிறதோ அவனின் நற்செயல்கள் யாவும் அழிந்துவிடும். (நூல்: புகாரீ) எனவும்,

மனமுரண்டாக எவன் தொழுகையை விடுகிறானோ அவன் அல்லாஹ்வின் பாதுகாப்பிலிருந்து நீங்கியவனாகிறான். நூல்கள்: அஹ்மத், பைஹகீ, இப்னுமாஜா, தப்ரானீ) எனவும்,

அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு நாயன் இல்லை என்றும், முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதி கூறும் வரையிலும், தொழுகையை நிலை நாட்டி ஸக்காத்துக் கொடுக்கும் வரையிலும் நான் மனிதர்களுடன் போராடும்படி கட்டளையிடப்பட்டுள்ளேன். இவைகளை நிறைவேற்றுபவர்கள் இஸ்லாத்தின் சட்டப்படி தண்டனைக்குரிய செயல்களைச் செய்யாதவரை, அவர்கள் தங்களது உயிர், உடமை ஆகியவைகளுக்கு என்னிடம் பாதுகாப்புப் பெறுவார்கள். அவர்களைப் பற்றிய கணிப்பு எல்லாம் வல்ல அல்லாஹ் இடத்தே இருக்கிறது. நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

எவன் தொழுகையில் பேணுதலாக இருக்கிறானோ அவனுக்கு, அத் தொழுகை மறுமையில் ஒளியாகவும், ஆதாரமாகவும், ஈடேற்றமளிப்பதாகவும் இருக்கும். எவன் அத்தொழுகையை அலட்சியப்படுத்துகிறானோ அவனுக்கு அது மறுமையில் ஒளியற்றும், ஆதாரமற்றும், ஈடேற்றமளிக்காமலும் இருக்கும். தொழுகையை அலட்சியப்படுத்தியவன் மறுமையில் ∴பிர்அவ்ன், காரூன், ஹாமான், உபையிப்னு கலப் ஆகியோருடன் (நரகில்) இருப்பான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், தப்ரானீ, இப்னுஹிப்பான்

மூவருடைய தொழுகையை அல்லாஹ் அங்கீகரிக்கமாட்டான்.

1. ஜமாஅத்தினரின் வெறுப்புக்குரிய இமாமின் தொழுகை.
2. சுதந்திரமானவனை அடிமையாக்கிக் கொண்டவரது தொழுகை
3. நேரம் தவறித் தொழுபவரின் தொழுகை.

நூல்கள்: அபூதாவூத், இப்னுமாஜா

எனவும்

எவன் காரணமின்றி இரண்டு தொழுகைகளைச் சேர்த்துத் தொழுதானோ அவன் பெரும் பாவங்களின் வாசலுக்குள்ளே வந்தவனாவான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: ஹாகிம்

குழந்தைகளைத் தொழும்படி ஏவுவது எப்போது?

உங்கள் குழந்தைகளை ஏழு வயதானவுடன் தொழும்படி ஏவுங்கள், பத்து வயதானால் அடித்துத் தொழ வையுங்கள். ஆண், பெண் குழந்தைகளைப் படுக்கையில் பிரித்து விடுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அபூதாவூத், இப்னுமாஜா

நீர் தொழுகைக்காக நின்று தக்பீர் கட்டியவுடன் குர்ஆனில் உமக்குத் தெரிந்த இலேசான வசனங்களை ஓதிக்கொள்ளும் பின் ருகூஉ செய்யும் அதில் தாமதம் செய்யும் பிறகு நேராக நிற்குமளவிற்கு நிலைக்குவாரும் பின்னர் சுஜூ து செய்யும் அதில் தாமதம் செய்யும் அதன் பின் இருப்புக்கு வந்து அதில் தாமதித்துக் கொள்ளும். இவ்வாறே எல்லாத் தொழுகைகளையும் செய்வீராக! என நபி(ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

ருகூஉ, சுஜூ துகளில் உறுப்பு (முதுகு) நேராக அமையும் வரை தொழாதவனின் தொழுகை கூடாது என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ

களவில் கடுமையானவன் யாரெனில் தொழுகையில் களவு செய்பவனாவானென நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். தோழர்கள், தொழுகையில் திருடுவது எப்படி எனக் கேட்டார்கள். ருகூஉவையும், சுஜூ தையும், ஓதுதலையும் அமைதியாகப் பூர்த்தி செய்யாமல் தொழுவது என நபி(ஸல்) அவர்கள் விடையளித்தார்கள். நூல்கள்: அஹ்மத், தப்ரானீ, ஹாகிம், இப்னு குஸைமா

ருகூஉக்கும், சுஜூ துக்குமிடையில் முதுகை நிமிர்த்திக் கொண்டு தாமதிக்காதவனை, கருணைக் கண்கொண்டு மறுமையில் அல்லாஹ் பார்க்கமாட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: அஹ்மத்

முனாஃபிக்கின் தொழுகை யாதெனில் சூரிய உதயமாகும் போது ஓதுதல்களை அவசர அவசரமாகக் கொஞ்சம் ஓதி செயல்களையும் அவசரமாகச் செய்வதாகும். (இவ்வாறு தொழுபவன் முனாஃபிக் ஆவான்.) நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

எனவும்,

ஒருநாள் நபி(ஸல்) அவர்கள் தோழர்களுடன் அமர்ந்திருக்கும் போது ஒருவர் வந்து தொழுதார், அவர் அவசர அவசரமாகத் தொழுவதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் இவர் இறந்தால் முஹம்மது(ஸல்) அவர்களின் உம்மத்தில் இல்லாமலேயே இறப்பார். காகம் அவரச அவசரமாகத் தீனியைக் கொத்துவது போல் தொழுகிறாரே! என்றார்கள். நூல்: இப்னு குஸைமா

ஹஅளவில் மோசம் செய்பவர்களுக்குக் கேடு தான்’ (அல்குர்ஆன் 83:1)

கூட்டுத் தொழுகையைப் புறக்கணித்தல்

கெண்டைக் காலை விட்டு (திரை) அகற்றப்படும் நாளில் ஸு ஜு து செய்யுமாறு (மக்கள்) அழைக்கப்படும் நாளில், (இவ்வுலகில் மாறு செய்த) அவர்கள் அதற்கும் இயலாதிருப்பார்கள். அவர்களின் பார்வைகள் கீழ் நோக்கியவையாக இருக்கும் நிலையில் இழிவு அவர்களை மூடிக் கொள்ளும் அவர்களோ (உலகில்) திடமாக இருந்தபோது, ஸு ஜூ து செய்யுமாறு அழைக்கப்பட்டுக் கொண்டுதானிருந்தனர். (ஆனால், அப்போது அலட்சியமாக இருந்தனர்.) (அல்குர்ஆன்: 68: 42, 43)

தொழுகைக்கு நேரம் வந்தவுடன் ஒருவரை ஜமாஅத் நடத்த ஏவியபின் நான் சிலருடன் கையில் தீயுடன் வெளியேறி ஜமாஅத்திற்குச் செல்லாதவர்களைக் கண்டு, அவர்கள் வீடுகளைத் தீ வைக்க விரும்புகிறேன் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

இரு கண்ணும் தெரியாத ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, யாரசூலுல்லாஹ்! எனக்கு இரு கண்ணும் தெரியாது. என்னை அழைத்து வர யாருமில்லை. என் வீட்டிலேயே தொழுகையை

நிறைவேற்றச் சலுகையளியுங்கள் எனக் கேட்டார். நபி(ஸல்) அவர்கள், அவருக்கு வீட்டில் தொழுது கொள்ள அனுமதி கொடுத்தார்கள். அவர் திரும்பி வீட்டுக்குச் செல்லும் போது மீண்டும் அவரையழைத்து உமக்கு பாங்குச் சப்தம் கேட்கிறதா? என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள் ஆம்! என்றார் கண்ணிழந்தவர். அப்படியானால் (கட்டாயம் ஜமாஅத்திற்குச்) சமூகமளிக்க வேண்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: முஸ்லிம்

இரு கண்ணும் தெரியாத, அழைத்து வருவதற்கும் யாருமில்லாத ஒருவருக்கும் வீட்டில் தொழ நபி(ஸல்) அவர்கள் அனுமதி வழங்கவில்லை. அப்படியிருக்க, எவ்வித காரணமுமின்றி ஆரோக்கியமானவன் கூட்டுத் தொழுகைக்கு வராமல் இருப்பதற்கு எப்படிச் சலுகை பெற முடியும்? கட்டாயம் அவர்கள் கூட்டுத் தொழுகையில் கலந்து கொள்ளவே வேண்டும். பகலெல்லாம் நோன்பு வைத்துக் கொண்டும், இரவெல்லாம் வணங்கிக் கொண்டும் ஒருவன் காலம் கழிக்கிறான். ஆனால், அவன் கூட்டுத் தொழுகைக்கு எப்பொழுதுமே வரமாட்டான். இவன் நிலையென்ன? என்று இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. இதே நிலையில் அவன் இறந்தால் நரகவாதியாவான் என இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். நூல்: திர்மிதீ

தொழுகைக்கு அழைக்கப்பட்டு எவ்வித காரணங்களுமின்றி ஜமாஅத்திற்கு வராது வீட்டில் தொழுபவன் தொழுகை செல்லாது என நபி(ஸல்) அவர்கள் கூறியதும், 'காரணங்கள்' என்றால் என்ன? எனத் தோழர்கள் கேட்டனர். பயம், நோய் ஆகியவைகளாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்கள்: அபூதாவூத், இப்னுமாஜா, இப்னுஹிப்பான்

கூட்டத்தினர் வெறுத்த நிலையில் இமாமத் செய்தவன், கோபத்துடன் படுத்த கணவனின் மனைவி, தொழுகைக்கு வாருங்கள் என்ற அழைப்புக் கேட்டும் ஜமாஅத்திற்குச் செல்லாதவன் ஆகிய மூவரையும் அல்லாஹ் சபிக்கிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: ஹாகிம்

நாளை மறுமையில் முஸ்லிமாக அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புபவர்கள் ஐந்து நேரத் தொழுகைகளையும் ஜமாஅத்துடன் தொழுவதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்! நீங்கள் வீட்டில் தொழுதால் தொழுகையை அலட்சியப்படுத்தும் நயவஞ்சகர்கள் எனக் கணிக்கப்படுவீர்கள் அதுமட்டுமல்ல, நபி(ஸல்) அவர்களின் வழியை (சுன்னாவை) புறக்கணித்தவர்களாகவும் கருதப்படுவீர்கள். நபியவர்களின் சுன்னாவை விட்டவன் வழிதவறியவனாவான். நபியவர்கள் காலத்தில் நடக்க முடியாத நிலையிலுள்ளவர்களும் கூட இருவரின் உதவியுடன் ஜமாஅத்திற்குச் செல்பவர்களாக இருந்தனர் என இப்னு மஸ்ஊது(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல்: புகாரீ

பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ளவன், வீட்டில் தொழுதால் தொழுகை செல்லாது என அலி(ரலி) அவர்கள் கூறினார்கள். பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ளவன் என்றால் யார்? எனக் கேட்கப்பட்டது. பாங்குச்சப்தம் காதில் விழுபவரெல்லாம் பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ளவர்கள் தாம் என விடையளித்தார்கள். நூல்: அஹ்மத்

அஸரும், இஷாவும் முனாஃபிக்கீன்களுக்கு (நயவஞ்சகர்களுக்கு)க் கஷ்டமானவையாக இருக்கின்றன. இவ்விரண்டின் மகத்துவத்தை அறிவார்களேயாயின் தவழ்ந்து கொண்டாவது ஜமாஅத்திற்குச் சென்று விடுவார்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

அஸருக்கும் 'இஷாவுக்கும் ஜமாஅத் தொழுகைக்குச் செல்லாதவர்களை நாங்கள் முனாஃபிக் என்று எண்ணிக் கொள்வோம் என இப்னு உமர்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல்கள்: பஸ்ஸார், தப்ரானீ, இப்னு குஸைமா

அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் உலோபத்தனம் செய்கிறவர் அதை தமக்கு நல்லதென ஒருபோதும் எண்ண வேண்டாம். அவ்வாறல்ல! அது அவர்களுக்குத் தீங்குதான். அவர்கள் உலோபத்தனத்தால் சேர்த்து வைத்த (பொருட்கள்) எல்லாம் மறுமையில் அவர்களின் கழுத்தில் அரிகண்டமாக போடப்படும். வானங்கள், பூமி ஆகியவற்றில் (இருக்கும் அனைத்துக்கும்) அனந்தர பாத்தியதை அல்லாஹ்வுக்கே உரியதாகும். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் அறிகிறான். அல்குர்ஆன் 3:180

நம்பிக்கை கொண்டவர்களே! நிச்சயமாக (அவர்களின்) பாதிரிகளிலும், சந்நியாசிகளிலும் அநேகர் மக்களின் சொத்துக்களைத் தவறான முறையில் சாப்பிடுகிறார்கள். மேலும், அல்லாஹ்வின் பாதையை விட்டும் (மக்களைத்) தடுக்கிறார்கள். இன்னும், பொன்னையும், வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு, அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவிடாது இருக்கிறவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு என்ற நற்செய்தியை (நபியே!) கூறும்! (நபியே! அவர்களுக்கு நீர் அந்த நாளை நினைவூட்டுவீராக!) அந்த நாளில் (அவர்கள் சேமித்து வைத்த செல்வத்தை) நரக நெருப்பிலிட்டுக் காய்ச்சி, அதைக் கொண்டு அவர்களின் நெற்றிகளிலும் விலாப்புறங்களிலும், முதுகுகளிலும் சூடு போடப்படும் - (இன்னும்,) ‘‘இதுதான் நீங்கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தது. எனவே, நீங்கள் சேமித்து வைத்தைச் சுவைத்துப் பாருங்கள்“ (எனக் கூறப்படும்). (அல்குர்ஆன் 9:34,35)

‘‘நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான் - ஆனால், எனக்கு வஹீ அறிவிக்கப்படுகிறது் நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒருவனேதான், எனவே, அவனையே நோக்கி நீங்கள் உறுதியாக நிற்பீர்களாக. இன்னும், அவனிடம் நீங்கள் மன்னிப்புக் கேளுங்கள் - அன்றியும் (அவனுக்கு) இணை வைப்போருக்குக் கேடுதான்“ என்று (நபியே!) நீர் கூறும்! அவர்கள்தாம் ஜகாத்தைக் கொடுக்காதவர்கள் மறுமையை மறுப்பவர்களும் அவர்களே! அல்குர்ஆன் 41: 6,7

ஆடு, மாடுகளின் நிலையென்ன என்று இன்னொருவர் கேட்டார். அவர்களும் அவைகளுக்குரிய ஸக்காத்தை நிறைவேற்றாவிட்டால் ஒட்டகையின் ஸக்காத்தைக் கொடுக்காதவன் போன்றே வேதனை செய்யப்படுவான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், நஸயீ

உங்களில் ஒருவருக்கு மரணம் வரு முன்னரே, நாம் உங்களுக்கு அளித்த பொருளிலிருந்து, தான தர்மம் செய்து கொள்ளுங்கள் (அவ்வாறு செய்யாது மரணிக்கும் சமயம்): ‘‘என் இறைவனே! என் தவணையை எனக்கு சிறிது பிற்படுத்தக் கூடாதா? அப்படியாயின், நானும் தான தர்மம் செய்து நல்லவர்களில் ஒருவனாக ஆகிவிடுவேனே“ என்று கூறுவான். அல்குர்ஆன் 63:10

உடன் படிக்கையை முறித்தவர்களைப் பகைவர்கள் வெற்றிகொள்வார்கள். அல்லாஹ்வின் தீர்ப்புக்கு மாற்றமாகத் தீர்ப்புச் செய்பவர்கள் மீது பஞ்சம் தலைவிரித்தாடும் கெட்ட செயல்கள் அதிகமானால் மரணங்கள் அதிகமாகும். அளவை நிறுவைகளில் மோசடி செய்தால் பயிர் தானியங்கள் குறையும். ஸக்காத்தைக் கொடுக்காவிட்டால் மழை குறையும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: திர்மிதீ

## நோன்பை விடுதல்

இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் இறையச்சமுடையோர்களாக ஆகும் பொருட்டு. உங்களுக்கு முன்பு (நம்பிக்கையாளர்களாக) இருந்தோரின் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போன்றே உங்களின் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில நாட்கள் (மட்டுமே இது கடமையாகும்). ஆனால்,

உங்களில் ஒருவர் நோயுற்ற நிலையிலோ, பயணத்திலோ இருந்தால், (அந்நாட்களின் நோன்பை) பின்னர் வரும் நாட்களில் நோற்கவேண்டும். எனினும் நோன்பை கடினமாகக் காண்கிற (நோற்கும் சக்தியற்ற)வர் பரிகாரமாக (அக்காலத்தில் நாள்தோரும்) ஓர் ஏழைக்கு உணவளிக்க வேண்டும். ஆனால், ஒருவர் தாமாக முன்வந்து அதிகம் கொடுப்பாராயின் அது அவருக்கே நன்மையானதாகும். ஆயினும், நீங்கள் (நோன்பின் பலனை) அறிவீர்களானால் அதை நோற்பதே உங்களுக்கு பெரும் நன்மையாகும். அல்குர்ஆன் 2: 183, 184

இஸ்லாம் ஐந்து கடமைகளிலுள்ளதாகும். அவை கலிமா, தொழுகை, ஸக்காத்து, ஹஜ்ஜு , நோன்பு என்பவைகளாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

எவன் ஒருவன் எவ்வித காரணமுமின்றி ரமளான் மாதத்தில் நோன்பை விடுகிறானோ அவன், ஏனைய நாட்கள் எல்லாம் நோன்பு வைத்தாலும் அது நிறைவேறாது என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா, இப்னுகுஸைமா

## ஹஜ்ஜு செய்யாமை

அதில் தெளிவான அத்தாட்சிகள் உள்ளன. (உதாரணமாக) இப்ராஹீம் என்ற மகாமு இப்ராஹீம் இடமும் இருக்கிறது. மேலும், அதில் நுழைகிறவர் (அச்சம் தீர்ந்தவராகப்) பாதுகாப்பும் பெறுகிறார். இன்னும், அதற்குரிய பாதையில் பயணம் செய்யச் சக்தி பெற்றிருக்கும் மனிதர்களுக்கு அல்லாஹ்வுக்காக அவ்வீடு சென்று ஹஜ் செய்வது கடமையாகும். ஆனால், எவரேனும் இதை நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்குக் குறையேற்படப் போவதில்லை. ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரில் எவரின் தேவையும் அற்றவனாக இருக்கிறான். அல்குர்ஆன் 3:97

## பெற்றோரைத் துன்புறுத்தல்

அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கிறான் அவ்விருவரில் ஒருவரோ, அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்துவிட்டால், அவர்களை ‘உஃப்’ (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடமிருந்து) விரட்ட வேண்டாம் - இன்னும், அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக! இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக. மேலும், ‘‘என் இறைவனே ! நான் சிறு பிள்ளையாக இருந்தபோது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!“ என்றும் கூறிப் பிரார்த்திப்பீராக ! அல்குர்ஆன் 17:23,24

நாம் மனிதனுக்குத் தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வஸிய்யத்துச் செய்(து போதித்)தோம் அவனுடையதாய் பலவீனத்தின் மேல் பலவீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள். இன்னும், அவனுக்குப் பால் குடிமறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன. எனவே,‘‘நீ எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது.“ அல்குர்ஆன் 31:14

1. அல்லாஹ்வுக்கும் வழிப்படுங்கள் அவன் தூதருக்கும் வழிப்படுங்கள். (அல்குர்ஆன் 3:32)

2. தொழுகையை நிலை நிறுத்துங்கள் ஸக்காத்தையும் கொடுங்கள். (அல்குர்ஆன் 2:43)

3. எனக்கும் உன்னுடைய தாய் தந்தைக்கும் நன்றி செலுத்தி வருவாயாக. (அல்குர்ஆன் 31:14)

'பெற்றோரின் திருப்தி அல்லாஹ்வின் திருப்தியாகும். பெற்றோரின் வெறுப்பு அல்லாஹ்வின் வெறுப்பாகும்' நூல்: திர்மிதீ, இப்னுஹிப்பான், ஹாகிம்)

'ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து யுத்தத்திற்குச் செல்ல அனுமதி கேட்டார். உன் பெற்றோர் உயிருடனிருக்கின்றனரா? என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள் ஆம்! என்று அம்மனிதர் கூறினார். அப்படியானால் அவர்களுக்குச் சேவை செய்வீராக! எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்கள்: புகாரீ, திர்மிதீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ

''பெரும் பாவங்களில் கொடியதை நான் உங்களுக்குக் கூறட்டுமா? அல்லாஹ்வுக்கு இணை வைத்தலும், பெற்றோரைத் துன்புறுத்துவதுமாகும்' நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

'தாய், தந்தையை வெறுத்தவனை அல்லாஹ் சபிப்பானாக!' நூல்: இப்னுஹிப்பான்

ஹஎல்லாப் பாவங்களுக்குரிய தண்டனைகளையும் அல்லாஹ் மறுமையில் கொடுக்கப் பிற்படுத்தி வைப்பான். ஆனால், பெற்றோருக்குத் துன்பம் இழைத்தவனுக்குரிய தண்டனையை அவன் இறப்பதற்கு முன்பே அளித்து விடுவான்'. நூல்: ஹாகிம்

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து யாரசூலுல்லாஹ்! என் தகப்பன் என் பொருட்களைத் தரும்படி கேட்கிறார் நான் என்ன செய்வது? எனக் கேட்டார். நீயும் உன் பொருட்களும் உன் தகப்பனுக்குத் தான் சொந்தம் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: இப்னுமாஜா

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம், சிகரத்தையுடையவர்கள் என்று குர்ஆனில் கூறப்பட்டிருப்பது யாரை? எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் பதிலளிக்கும் போது' சுவர்க்கத்திற்கும், நரகத்திற்குமிடையில் அச்சிகரமிருக்கிறது. பெற்றோரின் அனுமதியின்றி புனித யுத்தத்திற்குச் சென்று கொல்லப்பட்டவர்கள் அதில் இருப்பார்கள். அச்சிகரத்தில் பழமரங்களும், பசும் சோலைகளும், நீரூற்றுக்களும் இருக்கின்றன. புனித யுத்தத்தில் இறந்தவர்களுக்குச் சுவர்க்கம் கொடுக்க வேண்டும். ஆனால், பெற்றோரின் விருப்பமின்றிப் புனித யுத்தத்தில் கலந்து கொண்டு இறந்தவர்கள் தீர்ப்பளிக்கும் நாள் வரை இதில் தங்கியிருப்பார்கள். அதன்பின் அல்லாஹ்வின் தீர்ப்பின்படி சுவர்க்கத்திற்கோ, நரகத்திற்கோ அனுப்பப்படுவார்கள். இவர்களே சிகரத்தையுடையவர்கள் என அவர்கள் விடையளித்தார்கள். நூல்கள்: இப்னுமாஜா, இப்னு அபீ ஹாதிம்

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் அதிகமாக யாரை நேசிக்கவேண்டும்? எனக் கேட்டார். 'உனது தாயை' என நபியவர்கள் கூறினார்கள். மீண்டும் கேட்டார் மீண்டும் அப்பதிலே கொடுக்கப்பட்டது. அதன் பின்னும் கேட்டார். அதே பதில் அளிக்கப்பட்டது. நான்காம் முறை கேட்கப்பட்டதும் 'உனது தகப்பனை' என நபியவர்கள் கூறினார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

அபூதர்தா(ரலி) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து நான் ஒரு பெண்ணை திருமணம் செய்துள்ளேன். அவளைத் தலாக் கூறிவிடும்படி என் தாய் வற்புறுத்துகிறார். நான் என்ன செய்யவேண்டும்? எனக் கேட்டார். தாய் என்பவர் சுவர்க்கத்தின் நடுவாசலாவார் என நபி(ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டுள்ளேன். நீர் விரும்பினால் அவ்வாசலைப் பத்திரப்படுத்து! அல்லது வீணாக்கி விடு! எனப் பதிலளித்தார்கள். நூல்கள்: திர்மிதீ, அபூதாவூத், இப்னுமாஜா, நஸயீ, இப்னுஹிப்பான்

தாயின் பாதத்தடியில் சுவர்க்கமிருக்கிறது என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: நஸயீ, இப்னுமாஜா, ஹாகிம்

எவ்வித சந்தேகமின்றி மூவரின் பிரார்த்தனைகள் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. அநீதி இழைக்கப்பட்டவன் பிரார்த்தனை

2. பிரயாணியின் பிரார்த்தனை

3. பெற்றோர் மக்களுக்குச் செய்யும் பிரார்த்தனை என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நூல்கள்: அபூதாவூத், திர்மிதீ, தப்ரானீ

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! ஐந்து நேரமும் ஒழுங்காகத் தொழுது, ரமளானில், நோன்பு நோற்று, ஸக்காத்தையும், நிறைவேற்றி, ஹஜ்ஜு ம் செய்தேன். எனக்குரிய கூலி என்ன? என்று கேட்டார். இவ்வாறு ஒழுங்காக நடந்து கொண்டவன் மறுமையில் நபிமார்களுடனும், ஸித்தீகீன்களுடனும், ஹு தாக்களுடனும், ஸாலிஹீன்களுடனும் இருப்பான். அவன் பெற்றோருக்குத் துன்பமிழைப்பவனாக இருக்கக் கூடாது. (அப்படித் துன்பமிழைப்பவன் இந்தப் பாக்கியம் பெறமாட்டான்) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்கள்: அஹ்மத், தப்ரானீ, இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான்

ஒரு கணவனும், மனைவியும் குழந்தை எனக்குத் தான் சொந்தம் எனக் கூறிக்கொண்டு நபி(ஸல்) அவர்களிடம் தீர்ப்புக்கு வந்தார்கள். என்னுடைய இரத்தத்தினால் பிறந்த குழந்தை எனக்குத்தான் சொந்தம் எனக் கணவன் கூறினார். அவர் தன் இரத்தத்தை (இந்திரியத்தை) இலேசாகச் சுமந்து, இன்பத்துடன் என் கர்ப்பப்பையில் செலுத்தினார். ஆனால், நான் அக்குழந்தையைப் பத்து மாதம் சுமந்து, பத்தியம் காத்து, பாலூட்டி, துன்பங்கள் சகித்தேன். ஆகவே, குழந்தை எனக்குத்தான் சொந்தம் என்று மனைவி கூறினாள். நபி(ஸல்) அவர்கள் குழந்தை தாய்க்குத்தான் சொந்தம் எனத் தீர்ப்பளித்தார்கள். நூல்கள்: அபூதாவூத், அஹ்மத்

## உறவை துண்டித்தல்

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். எனவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள் அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும், (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்)- நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கிறான். அல்குர்ஆன் 4:1

(போருக்கு வராது) நீங்கள் பின் வாங்குவீர்களாயின், நீங்கள் பூமியில் குழப்பம் உண்டாக்கி உங்கள் சுற்றத்தாரின் உறவை துண்டித்து விடவும் முனைந்துவிடுவீர்களோ? அல்குர்ஆன் 47:22

அவர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவார்கள். இன்னும், (தாம் செய்த) உடன்படிக்கையை முறித்துவிடவும் மாட்டார்கள். மேலும், அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ் எது சேர்த்துவைக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டானோ, அதைச் சேர்த்து வைப்பார்கள். இன்னும், அவர்கள் தம் இறைவனுக்கு

அஞ்சுவார்கள். மேலும், (மறுமை நாளின்) கடுமையான கேள்வி கணக்கைக் குறித்தும் பயப்படுவார்கள். அல்குர்ஆன் 13:20,21

அல்லாஹ்விடம் அளித்த வாக்குறுதியை உறுதிப்படுத்திய பின்னர் முறித்துவிடுகிறவர்களுக்கும், அல்லாஹ் சேர்த்து வைக்க வேண்டுமென ஏவியதைப் பிரித்து விடுகிறவர்களுக்கும், பூமியில் குழப்பம் செய்கிறவர்களுக்கும் சாபந்தான் உண்டாகும். இன்னும், (மறுமையில்) அவர்களுக்கு மிகக்கெட்ட தங்குமிடமும் இருக்கிறது. அல்குர்ஆன் 13:25

உறவினர்களை வெறுப்பவன் சுவனம் புகமாட்டான். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

எவன் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசம் கொண்டானோ அவன், தன் உறவினர்களை இணைத்து நடப்பானாக! நூல்கள்: புகாரீ, அபூதாவூத், திர்மிதீ

ஒழுங்காக இருக்கும்போது உறவினர்களைப் பேணுவதைவிட உறவினர் வெறுத்தொதுக்கும் போதும் அவர்களை இணைத்து நடப்பதே உண்மையான பேணலாகும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: புகாரீ

## விபச்சாரம்

நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள் நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கிறது. அல்குர்ஆன் 17:32

அன்றியும், அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு நாயனைப் பிரார்த்திக்கமாட்டார்கள். இன்னும், அல்லாஹ்வினால் விலக்கப் பட்ட எந்த மனிதரையும் அவர்கள் நியாயமின்றிக் கொல்லமாட்டார்கள், விபச்சாரமும் செய்யமாட்டார்கள் - எனவே, இவற்றைச் செய்கிறவர் தண்டனை அடைய நேரிடும். மறுமை நாளில் அவருடைய வேதனை இரட்டிப்பாக்கப்படும். இன்னும், அதில் இழிவாக்கப்பட்டவராக நிரந்தரமாகத் தங்கிவிடுவர். அல்குர்ஆன் 25:68,69

விபசாரியும், விபசாரனும் - இவ் விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள்: மெய்யாகவே, நீங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் இறைநம்பிக்கையாளர்களாக இருந்தால், அல்லாஹ்வின் சட்டத்(தை நிறைவேற்றுவ)தில், அவ்விருவர் மீதும் உங்களுக்கு இரக்கம் ஏற்பட வேண்டாம். இன்னும், அவ்விருவரின் வேதனையையும் இறைநம்பிக்கையாளர்களில் ஒரு கூட்டத்தார் (நேரில்) பார்க்கட்டும். (அல்குர்ஆன்: 24:2)

விசுவாசியாக இருப்பவன் விபச்சாரம் செய்யமாட்டான். விசுவாசியாக இருப்பவன் திருடமாட்டான். விசுவாசியாக இருப்பவன் மது அருந்தமாட்டான். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ

ஒரு மனிதன் விபச்சாரம் செய்யும்போது அவன் 'ஈமான்' அவனை விட்டும் நீங்கிவிடுகிறது. அவ்வேலை முடிந்தவுடன் மீண்டும் திரும்புகிறது. (விபச்சாரம் செய்து கொண்டிருக்கும் போது மரணம் ஏற்பட்டால் விசுவாசம் - ஈமான் - இல்லாதவனாகவே மரணிப்பான்.) நூல்கள்: அபூதாவூத், பைஹகீ, திர்மிதீ

எவன், விபச்சாரம் செய்கிறானோ, மது அருந்துகிறானோ அவனை விட்டும் ஈமான் நீங்கி விடுகிறது, அவன் தன் சட்டையைக் கழற்றுவது போல. நூல்: ஹாகிம்

விபச்சாரம் செய்யும் கிழவன், பொய்யுரைக்கும் மன்னன், பெருமையடிக்கும் பிச்சைக்காரன் ஆகிய மூவரையும் மறுமையில் அல்லாஹ் கவனிக்கமாட்டான், சுத்தப்படுத்தமாட்டான், கொடிய வேதனையைக் கொடுப்பான். நூல்கள்: முஸ்லிம் நஸயீ

கண்ணின் விபச்சாரம் அந்நிய பெண்ணைப் பார்த்தல், நாவின் விபச்சாரம் (அவளுடன்) பேசுதல், கையின் விபச்சாரம் (அவளுறுப்பைப் பிடித்தல்) காலின் விபச்சாரம் (அவளைத் தேடி) நடத்தல், மர்மஸ்தானங்கள் இவைகளை உண்மைப்படுத்துகின்றன அல்லது பொய்யாக்குகின்றன. நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ

அல்லாஹ்வின் தூதரே! கொடிய பாவம் எது? எனக் கேட்டேன். அல்லாஹ்வுக்கு இணை வைப்பதாகும் என நபியவர்கள் கூறினார்கள். அதற்கடுத்த கொடியபாவம் எது? எனக்கேட்டேன். உன்பக்கத்து வீட்டாளுடன் விபச்சாரம் செய்வதாகும் என நபியவர்கள் கூறிவிட்டுக் குர்ஆனிலுள்ள 25:68 வசனங்களை ஓதிக்காட்டினார்கள் என இப்னு மஸ்ஊது(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

நான் மிஃராஜ் செல்லும் போது மேற்புறம் குறுகியும் கீழ்புறம் விசாலமானதுமாகிய ஒரு அடுப்பின் பக்கத்தில் சென்றேன். கீழ்பகுதியில் நிர்வாணமான ஆண்களும், பெண்களும் இருக்கின்றனர். நெருப்பு, ஜு வாலை விட்டெரியும் போது அவர்கள் மேற்புறத்தை நோக்கி வெளியே வர முயற்சிக்கிறார்கள். முடியாமல் கீழேயே கிடந்து கூச்சலிடுகிறார்கள். வேதனையால் துடிதுடித்துக் கதறுகிறார்கள். இவர்கள் யார்? எனக் கேட்டேன். இவர்கள் தான் விபச்சாரம் செய்த ஆண்களும், பெண்ளுமாவார்கள். மறுமை விசாரணை நடைபெறும்வரை அவர்களுக்கு இவ்வேதனை கொடுக்கப்படுகிறது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: புகாரீ

எவன் மது அருந்திய நிலையில் மரணித்தானோ அவனுக்கு நரகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் 'கூத்தா' என்னும் நீர் புகட்டப்படும். அந்த நீர், விபச்சாரம் புரிந்த பெண்களின் மர்மஸ்தானத்திலிருந்து வடியும் சீழும் ஊனுமாகும். இதையே, மதுவில் ஊற்றி இறந்தவனுக்கு கொடுக்கப்படும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், அபூயஹ்லா, இப்னுஹிப்பான், ஹாகிம்

## ஆண் புணர்ச்சி

எனவே (தண்டனை பற்றிய) நம் கட்டளை வந்துவிட்டபோது, நாம் (அவ்வூரின்) அதன் மேல் தட்டைக் கீழ் தட்டாக்கி விட்டோம். இன்னும், அதன் மீது சுடப்பட்ட செங்கற்களை மழைபோல் பொழியவைத்தோம். அக்கற்கள் உம் இறைவனிடமிருந்து அடையாளம் இடப்பட்டிருந்தன (அவ்வூர்) இந்த அநியாயக்காரர்களுக்கு வெகு தொலைவிலும் இல்லை. அல்குர்ஆன் 11:82,83

''உலகத்தார்களில் நீங்கள் ஆடவர்களிடம் (கெட்ட நோக்கோடு) நெருங்குகிறீர்களா? ''இன்னும், உங்களுடைய இறைவன் உங்களுக்காகப் படைத்துள்ள உங்கள் மனைவிமார்களை விட்டு விடுகிறீர்கள் இல்லை, நீங்கள் வரம்பு கடந்த சமூகத்தாராக இருக்கிறீர்கள்." (அல்குர்ஆன் 26:165,166)

இன்னும், லூத்தை (நபியாக்கி) - நாம் அவருக்கு ஞானத்தையும், கல்வியையும் கொடுத்தோம் அறுவறுப்பான செயல்களைச் செய்து கொண்டிருந்த(வர்களின்) ஊரைவிட்டும் அவரை நாம் காப்பாற்றினோம் நிச்சயமாக அவர்கள் மிகவும் கெட்ட சமூகத்தினராகவும், பெரும் பாவிகளாகவும் இருந்தனர். (அல்குர்ஆன் 21:74)

லூத் நபியின் கூட்டத்தினர் செய்த ஆண் புணர்ச்சியைக் குறித்து நான் அச்சமூட்டுகிறேன். லூத் நபியின் கூட்டத்தினர் செய்த (ஆண் புணர்ச்சி) வேலையைச் செய்தவனை அல்லாஹ் சபிப்பானாக! என்று மூன்று விடுத்தம் நபியவர்கள் கூறினார்கள். நூல்கள்: திர்மிதீ, இப்னுமாஜா

லூத் நபியின் கூட்டத்தினர் செய்த கொடிய (ஆண் புணர்ச்சி) பாவத்தைச் செய்பவர்களைக் கண்டால் இருவரையும் கொலை செய்யுங்கள். நூல்கள்: அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா

ஆணுடைய அல்லது பெண்ணுடைய பின் துவாரத்தில் புணர்ந்தவனை அல்லாஹ் மறுமையில் கருணைக் கண்கொண்டு பார்க்கமாட்டான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா

## வட்டி

நம்பிக்கை கொண்டோரே! இரட்டித்துக் கொண்டே அதிகரித்த நிலையில் வட்டி (வாங்கித்) தின்னாதீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி (இதைத் தவிர்த்துக் கொண்டால்) வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன் 3:130)

வட்டி (வாங்கித்) உண்ணுகிறவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் பீடிக்கப்பட்ட ஒருவன், பைத்தியம் பிடித்தவனாக எழுவது போன்று அல்லாமல் எழமாட்டார்கள் இதற்குக் காரணம் அவர்கள் ''நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே" என்று அவர்கள் கூறியதேயாகும் அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமானதாக்கி, வட்டியை தடுத்தியிருக்கிறான் ஆயினும், தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின், அதைவிட்டும் எவன் விலகி விடுகிறானோ, முன்னர் வாங்கியது அவனுக்கே உரித்தானது. எனினும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது. ஆனால், ( நற்போதனை பெற்ற பின்னரும் இப்பாவத்தின் பால்) எவர்கள் திரும்புகிறார்களோ அவர்கள்தாம் நரகவாசிகள் அவர்கள் அதில் நிரந்தரமாகத் தங்கிவிடுவார்கள். (அல்குர்ஆன் 2:275)

எனவும், அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்.

இரத்த ஆறு ஒன்றில் நெருப்புக் கற்களை விழுங்கிக் கொண்டு அதைவிட்டும் வெளியேற முடியாமல் தத்தளித்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் சிலரைக் கண்டு ஜிப்ரயீல்(அலை) அவர்களிடம் இவர்கள் யார்? எனக் கேட்டேன். இவர்கள் தான் வட்டி சாப்பிட்டவர்கள். மறுமை விசாரணை நடைபெறும் வரை இவர்களுக்கு இந்த வேதனை கொடுக்கப்படுகறிது என ஜிப்ரீல்(அலை) அவர்கள் பதிலளித்ததாக நபியவர்கள் கூறுகிறார்கள். நூல்: புகாரீ

எந்தக் கூட்டத்தில் வட்டி அதிகரிக்கிறதோ அங்கு மனநோய் அதிகரிக்கும். எங்கு விபச்சாரம் அதிகரிக்கிறதோ அங்கு மரணங்கள் அதிகரிக்கும் எங்கு அளவை நிறுவைகளில் மோசடி நடைபெறுகிறதோ அங்கு அல்லாஹ் மழையைக் குறைத்து விடுவான் என நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். நூல்கள்: இப்னுமாஜா, பைஹகீ, பஸ்ஸார்

வட்டியின் பாவங்கள் எழுபது பிரிவுகளை உடையது. அதில் மிகவும் இலேசானது ஒருவன் தன் தாயைப் புணர்வது போன்ற பாவமாகும். நூல்கள்: இப்னுமாஜா, பைஹகீ

வட்டியினால் சம்பாதிக்கும் ஒரு திர்ஹம் முப்பத்தாறு தடவை விபச்சாரம் செய்யும் பாவத்திற்குச் சமமாகும். நூல்கள்: பைஹகீ, இப்னு, அபித்துன்யா

வட்டியின் பாவங்கள் 70 பிரிவிலடங்கும். அவற்றில் மிக இலேசானது ஒருவர் தன் தாயைப் புணர்வது போன்றதாகும் வட்டியில் மிகப் பெரியது யாதெனில் ஒரு முஸ்லிமைப் பற்றி அவதூறு பேசுவதாகும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: இப்னுமாஜா, பைஹகீ, தப்ரானீ

பணம் கொடுக்கல் வாங்கலில் மட்டுமல்ல இன்னும் பல கோணங்களில் வட்டி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பெரும் பாவங்களிலொன்றான இந்த வட்டி பொருளாதார வளர்ச்சியையும் குறைத்து நாட்டில் வறுமையையும் அதிகரிக்கச் செய்யும். ஒருவனுக்கு சிபாரிசு செய்து அதற்காக ஏதும் அன்பளிப்பைப் பெறுவதும் வட்டியைச் சாரும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: அபூதாவூத்

## அனாதைகளின் சொத்தைச் சாப்பிடுதல்

நிச்சயமாக, அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குகிறவர்கள் தங்களின் வயிறுகளில் விழுங்குவதெல்லாம் நெருப்பைத்தான் - இன்னும், அவர்கள் (மறுமையில்) கொழுந்து விட்டெறியும் (நரக) நெருப்பிலேயே புகுவார்கள். அல்குர்ஆன் 4:10

அனாதைகளின் பொருளை அவர்கள் பிராயமடையும் வரையில் நியாயமான முறையிலன்றி தொடாதீர்கள்.... (அல்குர்ஆன் 6:152)

எனவும் அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

நானும் அநாதையைப் பொறுப்பேற்றவனும் சுவர்க்கத்தில் இவ்வாறு இணைந்திருப்போம் எனக்கூறி நபி(ஸல்) அவர்கள் சுட்டுவிரலையும், நடுவிரலையும் இணைத்துக் காட்டினார்கள். நூல்கள்: புகாரீ, அபூதாவூத், திர்மிதீ

இறைவசனத்திலேயுள்ள அனாதையாயினும் அல்லது அந்நிய அனாதையாயினும் அக்குழந்தைக்குரிய தேவைகளை உவப்புடன் நிறைவேற்றுபவனுக்கு நபியவர்களுடன் சுவர்க்கத்திலிருக்கும் பாக்கியம் கிடைக்கிறது. இதற்கு ஆதாரமாக அவன் சொந்தத்திலிருந்தாலுமோ அல்லது தூரத்து அனாதையாயிருந்தாலுமோ அனாதையைப் பொறுப்பேற்பவனும் நானும் சுவர்க்கத்தில் இணைந்து இருப்போம் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: முஸ்லிம்

தன் உணவு, குடிப்பு யாவற்றிலும் வித்தியாசம் காட்டாது அனாதையை வளர்ப்பவனுக்குச் சுவர்க்கம் கடமையாகி விடும், அவன் பிழை பொறுக்க முடியாத பாவத்தில் ஈடுபடாமலிருந்ததால். நூல்: திர்மிதீ

ஒரு அனாதையின் தலையை இரக்கத்துடன் தடவினால் (அவ்வனாதையைக் கவனித்தால்) அவன் கைபடும் ஒவ்வொரு உரோமத்திற்கும் ஒரு நன்மை பதியப்படும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: அஹ்மத்

## அல்லாஹ்வின் மீதும் ரசூலின் மீதும் பொய்யுரைத்தல்

(நபியே!) அல்லாஹ்வின் மீது பொய் கூறும் இவர்களின் முகங்கள் மறுமை நாளன்று கறுத்துப் போயிருப்பதை நீர் காண்பீர்.... (அல்குர்ஆன் 39:60)

மனமுரண்டாக என் மீது பொய்யுரைத்தவன் தங்குமிடம் நரகமாகும். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம், உட்பட மற்றெல்லாக் கிரந்தங்களும்)

பொய்யெனத் தெரிந்தும் என் மீது பொய்யுரைப்பவன் பொய்யனாவான். நூல்: முஸ்லிம்

என் மீது பொய்யுரைப்பவன் உங்களுக்கு மத்தியில் தன் தேவைக்காகப் பொய்யுரைப்பவனை போன்றவனல்லன் என் மீது பொய்யுரைக்கும் அவன் தங்குமிடம் நரகமாகும். நூல்: முஸ்லிம்

## யுத்த களத்திலிருந்து ஓடுதல்

---

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நிராகரிப்போரைப் (போரில்) ஒன்று திரண்டவர்களாக சந்தித்தால் அவர்களுக்கு புறமுதுகு காட்டாதீர்கள். (எதிரிகளை) வெட்டுவதற்காகவோ, (தம்) கூட்டத்தாருடன் சேர்ந்து கொள்வதற்காகவோ அன்றி, அந்நாளில் புறமுதுகு காட்டித் திரும்புபவர் நிச்சயமாக அல்லாஹ்வின் கோபத்திற்கு உள்ளாகிவிடுவார். அவரின் தங்குமிடம் நரகமே. இன்னும், அது மிகவும் கெட்ட தங்குமிடம். (அல்குர்ஆன் 8:15,16

அழிவின் பால் உங்களைக் கொண்டு செல்லக்கூடிய ஏழு பெரும் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு இணை வைத்தல், சூனியம், தண்டனைக்கன்றி கொலை செய்தல், அனாதைகளின் சொத்தைச் சாப்பிடுதல், வட்டி சாப்பிடுதல், யுத்த களத்திலிருந்து மரணத்திற்குப் பயந்து ஓடுதல், கெட்ட நினைவுகளற்ற பத்தினிப் பெண்களைப் பற்றி அவதூறு சொல்லல் (ஆகியவைகளாகும்) என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

உங்களில் (பொறுமையும்) சகிப்புத்தன்மை(யும்) உடைய இருபது பேர்களிருந்தால் இருநூறு பேர்களை வெற்றிகொண்டு விடுவார்கள். (அல்குர்ஆன் 8:65)

என்ற இந்தக் குர்ஆன் வசனம் இறங்கியது ஒரு முஸ்லிம் இருபது விரோதிகளைக் கொல்லச் சக்தி பெற்றிருக்க வேண்டுமென்பதைக் காட்டுவதற்காகும்.

எனினும் நிச்சயமாக உங்களில் பலவீனம் இருக்கிறது என்பதை அறிந்து, தற்சமயம் அல்லாஹ் (அதனை) உங்களுக்கு இலகுவாக்கி விட்டான் - எனவே உங்களில் பொறுமையும் (சகிப்புத் தன்மையும்) உடைய நூறு பேர் இருந்தால் அவர்கள் இரு நூறு பேரின் மீது இருந்தால் அவர்கள் இரு நூறு பேரின் மீது வெற்றிக் கொள்வார்கள் உங்களில் (இத்தகையோர்) ஆயிரம் பேர் இருந்தால் அல்லாஹ்வின் உத்திரவு கொண்டு அவர்களில் இரண்டாயிரம் பேரின் மீது வெற்றிக் கொள்வார்கள் - (ஏனெனில்) அல்லாஹ் - பொறுமையாளர்களுடனே இருக்கிறான். (அல்குர்ஆன் 8:66)

என்ற குர்ஆன் வசனம் இறங்கியதால் இரு விரோதியையாவது கொல்லச் சக்தி பெற்றிருக்க வேண்டும் என்று சலுகை கிடைத்தது என இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். நூல்: புகாரீ

ஆனால், மக்களுக்கு அநியாயம் செய்து நீதமின்றி பூமியில் அட்டூழியம் செய்கிறவர்களின் மீதுதான் (குற்றம் சுமத்த) வழியிருக்கிறது. இத்தகையோருக்கு நோவினை செய்யும் வேதனையுண்டு. (அல்குர்ஆன் 42:42)

மேலும், அக்கிரமக்காரர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி அல்லாஹ் பராமுகமாக இருக்கிறான் என்று (நபியே!) நீர் நிச்சயமாக எண்ண வேண்டாம் அவர்களுக்கு (தண்டனையை) தாமதப்படுத்துவதெல்லாம், கண்கள் விரைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும் (அந்த மறுமை) நாளுக்காகத்தான். (அந்நாளில்) தங்களின் சிரங்களை (எப்பக்கமும் பாராமல்) நிமிர்த்தியவர்களாகவும், விரைந்தோடுபவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள் (நிலை குத்திய) அவர்களின் பார்வை அவர்கள் பக்ககம் திரும்பாது. இன்னும், அவர்களின் இதயங்கள் (திடுக்கங் கொண்டு) சூனியமாக இருக்கும். (அல்குர்ஆன் 14:42, 43)

இன்னும், தாம் செய்து கொண்டிருந்த தீய காரியங்களைவிட்டு ஒருவரையொருவர் தடுப்போராகவும் அவர்கள் இருக்கவில்லை அவர்கள் செய்து கொண்டிருந்தவையெல்லாம் நிச்சயமாக மிகவும் தீயவையாகும். (அல்குர்ஆன் 5:79)

எவன் சதி செய்கிறானோ அவன் எம்மைச் சேர்ந்தவனல்லன் எனவும், நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்களே உங்கள் பரிபாலனத்தைப் பற்றிக் கேட்கப்படுவீர்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

எனவும்,

எந்தத் தலைவனாவது தன் கீழுள்ளவர்களுக்குச் சதி செய்தால் அவன் நரகவாதியாவான். நூல்: தப்ரானீ

## அநீதமான நடத்தல்

எவனுக்கு அதிகாரமளிக்கப்பட்டு அதை அவன் நிறைவேற்றவில்லையோ அவனுக்கு அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கிவிடுவான். நூல்: புகாரீ

மனிதர்களுடையில் தீர்ப்புச் செய்யும் நீதிபதி மறுமையில் எழுப்பப்படும் போது அவன் பிடரியைப் பிடித்தவாறே ஒரு வானவர் வருவார். தள்ளி விடு என்ற உத்தரவு கிடைத்ததும் அவனை அம்மலக்கு நரகில் தள்ளிவிடுவார். நாற்பது காத தூரம் நரகக்குழியில் சென்று விழுவான். நூல்: அஹ்மத்

ஒரு கூட்டத்திற்கு தலைவனாயிருப்பவன் மறுமையில் கழுத்தில் கையைக் கட்டியவனாகக் கொண்டு வரப்படுவான். விசாரணையின் பின் அவன் நீதமாக நடந்திருந்தால் தப்பித்துக் கொள்வான். அநீதமான நடந்திருந்தால் அப்படியே நரகில் தள்ளப்படுவான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், இப்னு ஹிப்பான்

சில காலத்திற்குப் பின் கெட்ட தலைவர்கள் தோன்றுவார்கள். அவர்கள் கூறும் பொய்களை உண்மையாக்குபவனும், அவன் செய்யும் அநீதங்களுக்கு உடந்தையாயிருப்பவனும் என்னைச் சேர்ந்தவனல்லன். எனக்கும், அவனுக்கும் எவ்வித தொடர்புமிருக்காது, என் நீர்த்தடாகத்தில் நீர் அருந்தவுமாட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், திர்மிதீ, நஸயீ, பஸ்ஸார்

நீதியுடன் நடந்துகொண்ட ஒரு நீதிபதி மறுமையில் தன்னை விசாரணை செய்யப்படும் கஷ்டத்தைக் கண்டு ஒரு ஈத்தம் பழத்திற்காகாவாவது இரண்டு பேருக்கிடையில் நீதமளிக்காமலிருந்தால் நன்றாயிருந்திருக்குமே என ஏங்குவான். நூல்: பஸ்ஸார், தப்ரானீ

## பெருமை

மூஸா கூறினார்: ‘‘கேள்வி கணக்குக் கேட்கப்படும் நாளின் மீது நம்பிக்கை கொள்ளாத, பெருமையடிக்கும் எல்லோரையும், விட்டு, என்னுடைய இறைவனாகவும், உங்களுடைய இறைவனுமாகவும் இருப்பவனிடம் நிச்சயமாக நான் பாதுகாவல் தேடுகிறேன்.“ (அல்குர்ஆன் 40:27)

சந்தேகமின்றி அல்லாஹ், அவர்கள் மறைத்து வைத்திருப்பதையும், அவர்கள் பகிரங்கப்படுத்துவதையும் நிச்சயமாக அறிவான் (ஆணவங் கொண்டு) பெருமையடிப்பவர்களை அவன் நிச்சயமாக நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 16:23)

''(பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களைவிட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப்பெருமைக்காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கமாட்டான். (அல்குர்ஆன் 31:18)

எனவும் அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

இவ்வசனங்கள் மூலம் பெருமை பேசுவது, அகந்தை கொள்வது யாவும் விலக்கப்பட்டுள்ளன. பெருமைக்குரியவன் அல்லாஹ் ஒருவனே, மனிதர்களுக்கு அது எவ்வகையிலும் பொருந்தாது. கண்ணியம் என்னுடைய ஆடை பெருமை என்னுடைய போர்வை என அல்லாஹ் கூறுகிறான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். நூல்: முஸ்லிம்

வானவர்களை நோக்கி, ''ஆதமுக்கு(ப் பணிந்து) ஸஜ்தா செய்யுங்கள்'' என்று கூறியபோது, இப்லீஸ் என்பவனைத் தவிர மற்ற அனைவரும் ஸஜ்தாச் செய்தார்கள் அவன் (சிரம் சாய்க்க) மறுத்தான் ஆணவமும் கொண்டான் இறைமறுப்பாளர்களில் ஒருவனாகவும் அவன் ஆகிவிட்டான். (அல்குர்ஆன் 2:34)

எவனுடைய உள்ளத்தில் கடுகளவு பெருமை உண்டோ அவன் சுவனம் புகமாட்டான். நூல்: முஸ்லிம்

நரகவாதிகளைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கட்டுமா? மமதை கொண்டவன், மமதையுள்ளவர்கள் யாவருமே நரகவாதிகள் தான் நூல்: புகாரீ, முஸ்லிம்

எனவும்,

நடையில் பெருமையடிப்பவனும், தற்புகழ்ச்சி பேசுபவனும் மறுமையில் அல்லாஹ்வின் கோபப் பார்வைக்கு உள்ளாவார்கள் நூல்: தப்ரானீ, ஹாகிம்

எனவும்,

மறுமையில் முதலாவதாக நரகத்தில நுழைபவர்கள் அநீதமிழைக்கும் தலைவன் ஸக்காத்தைக் கொடுக்காத பணக்காரன் பெருமையடிக்கும் பிச்சைக்காரன் ஆகிய மூவருமாவார்கள் நூல்: இப்னுகுஸைமா, இப்னு ஹிப்பான்

எனவும்,

கரண்டைக் காலுக்குக் கீழே வருமாறு உடுத்தியிருப்பவன் நரகவாதியாவான் நூல்: புகாரீ

## பொய்ச்சாட்சி கூறல்

----விக்கிரக ஆராதனையின் அசுத்தத்திலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். பொய்யான வார்த்தையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 22:30)

அவர்கள் பொய்ச்சாட்சி சொல்லமாட்டார்கள். (அல்குர்ஆன் 25:72)

பொய்ச்சாட்சியம் கூறுபவனின் பாதமிரண்டும் மறுமையில் அவன் நரகம் போகும் வரை அசையாமலிருக்கும் நூல்: இப்னுமாஜா, ஹாகிம்

எனவும்,

பெரும் பாவங்களில் பெரியவைகளை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என நபி(ஸல்) அவர்கள் மூன்று முறை கேட்டார்கள். நல்லது அறிவியுங்கள் அல்லாஹ்வின் தூதரே! எனத் தோழர்கள் கூறினார்கள். அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோரை நிந்தித்தல் (இவைகளைக் கூறும்போது சாய்ந்திருந்தது கொண்டிருந்த நபி(ஸல்) அவர்கள் நிமிர்ந்திருந்து) பொய்ச்சாட்சியம் கூறுதல், பொய்யச்சாட்சியம் கூறுதல் என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் மௌனமாக இருந்தால் நல்லதே எனத் தோழர்கள் சொல்லிக் கொள்ளும் வரை கூறிக் கொண்டிருந்தார்கள். நூல்: புகாரீ, முஸ்லிம்

## மது அருந்துவது

நம்பிக்கை கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். எனவே, நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றைவிட்டும் நீங்கள் விலகிக் கொள்ளமாட்டீர்களா? (அல்குர்ஆன் 5:90, 91)

மதுவிலக்குச் சம்பந்தமான குர்ஆன் வசனம் வந்ததும் நபித்தோழர்கள் 'மது அருந்துவது ஷிர்க்குக்கு ஒப்பான பெரிய பாவம்' எனத் தெருத் தெருவாகக் கூறிக் கொண்டு போனார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல்கள்: தப்ரானீ, ஹாகிம்

நம்பிக்கை கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். எனவே, நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றைவிட்டும் நீங்கள் விலகிக் கொள்ளமாட்டீர்களா? (அல்குர்ஆன்5:90,91)

மதுவிலக்குச் சம்பந்தமான குர்ஆன் வசனம் வந்ததும் நபித்தோழர்கள் 'மது அருந்துவது ஷிர்க்குக்கு ஒப்பான பெரிய பாவம்' எனத் தெருத் தெருவாகக் கூறிக் கொண்டு போனார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல்கள்: தப்ரானீ ஹாகிம்

மயக்கம் தரும் பொருட்களெல்லாம் மதுவாகும். எல்லா வகையான மதுவும் ஹராமாகும். எவன் இவ்வுலகில் மதுவருந்தி பாவமன்னிப்புத் தேடி அதை விட்டு விடாமல் இறந்தானோ அவன் மறுமையில் மதுவை அருந்தும் பாக்கியம் இழந்தவனாவான் எனவும், (முஸ்லிம்)

எவன் இவ்வுலகில் மது அருந்துகிறானோ அவன் மறுமையில் நரகவாதிகள் ஊனைக் குடிப்பான் எனவும் நூல்கள்: முஸ்லிம், நஸயீ

மதியை மயக்கும் பொருட்கள் எந்த வகையாயினும் அதாவது திரவப் பொருள், திடப் பொருள், மாப்பொருள் எல்லாமே விலக்கப்பட்டவையாகும். எவன் மது உண்டு மயக்கமடைந்தானோ அவன் நாற்பது நாட்களுக்கு செய்யும் எந்த நற்செயலும் அல்லாஹ்விடம் ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. நூல்கள்: திர்மிதி, நஸயீ, இப்னு ஹிப்பான், ஹாகிம்

எவன் மது உண்டு மயக்கமுடையாமலிருந்தானோ அவனை நாற்பது நாளைக்கு அல்லாஹ் நோக்க மாட்டான் இதே நிலையில் அவன் மரணித்தால் சிலை வணங்கியைப் போன்றே மரணிப்பான். மறுமையில் அல்லாஹ் அவனுக்கு நரகவாசிகளின் ஊனைக் குடிக்கக்கொடுப்பான் நூல்கள்: திர்மிதீ, நஸயீ

## சூது

நம்பிக்கை கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். எனவே, நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றைவிட்டும் நீங்கள் விலகிக் கொள்ளமாட்டீர்களா? (அல்குர்ஆன் 5:90,91)

## கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லல்

கற்புள்ள பெண்களின் மீது அவதூறு கூறி (அதை நிரூபிக்க) நான்கு சாட்சிகளைக் கொண்டு வராதவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அவர்களின் சாட்சியத்தை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள்தாம் தீயவர்கள். (அல்குர்ஆன் 24:4)

இறைநம்பிக்கையுள்ள ஒழுக்கமுள்ள, பேதை பெண்களின் மீது அவதூறு கூறுகிறவர்கள் நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் சபிக்கப்பட்டவர்கள். இன்னும், அவர்களுக்குக் கடுமையான வேதனையுமுண்டு. அந்நாளில் அவர்களின் நாவுகளும், அவர்களின் கைகளும், அவர்களின் கால்களும் அவர்களுக்கெதிராக, அவர்கள் செய்தவை பற்றிச் சாட்சியம் கூறும்! (அல்குர்ஆன் 24:23,24)

## மோசடி செய்தல்

எந்த நபிக்கும் மோசடி செய்வது கூடாது. மோசம் செய்தவர் மோசம் செய்ததைத்தான் மறுமைநாளில் கொண்டு வருவார். அப்போது ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அது சம்பாதித்த (தற்குரிய) பலன் (குறைவின்றிக்) கொடுக்கப்படும். இன்னும், அவர்கள் எவ்வகையிலும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள். (அல்குர்ஆன் 3:161)

(உம்முடன் உடன்படிக்கை செய்திருக்கும்) எந்தக் கூட்டத்தாரும் மோசம் செய்வார்கள் என நீர் பயந்தால், (அதற்குச்) சமமாகவே (அவ்வுடன் படிக்கையை) அவர்களிடம் எறிந்து விடும் நிச்சயமாக அல்லாஹ் மோசம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 8:58)

யுத்தத்தில் கிடைத்த பொருட்களில் அல்லது ஸக்காத்துப் பொருட்களில் தலைவர் பங்கிட்டுத் தருவதற்கு முன் யாராவது எடுத்துக் கொண்டால், அதை மறுமையில் வேதனையோடு சுமந்தவனாகக் கொண்டு வருவான். அது கத்திக்கொண்டு மனிதர்களின் கவனத்தைத் திருப்பிக் கொண்டிருக்கும். என்னிடம் வந்து இந்தத் துன்பத்திலிருந்து காப்பாற்றும்படி கேட்பான். நான் 'இப்போது எதுவும் செய்யமுடியாது உலகத்திலேயே நன்மை, தீமைகளைக் கூறிவிட்டேன்' என்று கூறிவிடுவேன். இவ்வாறே குதிரையை அபகரித்தவனும், ஆட்டை அபகரித்தவனும், உடுதுணிகளை அபகரித்தவனும் பொருட்களை அபகரித்தவனும் அவைகளைச் சுமந்து கொண்டு வருவார்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் நாங்கள் நபி(ஸல்) அவர்களோடு 'கைபர்' யுத்தத்தில் பங்கு பெற்றோம். யுத்தம் முடிந்து திரும்பி வரும் போது 'வாதில் குரா' என்னுமிடத்தில் தங்கினோம். நபி(ஸல்) அவர்களின் அடிமை, நபி(ஸல்) அவர்கள் வாகனத்திலிருந்து இறங்குவதற்கு உதவி செய்து கொண்டிருக்கும் போது, விரோதிகள் மறைந்திருந்து எய்த அம்பு ஒன்று வந்து அவ்வடிமையின் பிடரியில் தாக்கியது. அவ்விடத்திலேயே அடிமை மரணித்து விட்டார். நாங்கள் 'ஷஹீத்' பதவி கிடைத்ததற்காக அவ்வடிமையைப் பாராட்டினோம். வேண்டாம்! யுத்தப் பொருளிலிருந்து (தலைவர் பங்கிட்டுக் கொடுப்பதற்கு முன்) அபகரித்த போர்வையினால் இப்போது அவர் நரகவேதனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார் அவரைப் பாராட்ட வேண்டாம் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த நபித்தோழர்கள் தலைவரின் அனுமதியில்லாமல் எடுத்த செருப்பு வார் ஒன்றிரண்டை எடுத்து வந்து நபி(ஸல்) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, மாலிக், அஹ்மத்

கர்கரா என்பவர் நபி(ஸல்) அவர்களின் சாமான்களைச் சுமப்பவராக இருந்தார். அவர் மரணித்த பின் 'அன்னார் நரகிலே இருக்கிறார்' என நபி(ஸல்) அவர்கள் கூறியதும், வியப்படைந்த தோழர்கள் சென்று அவர் பொருட்களை ஆராய்ந்தார்கள். அப்போது அவர் மோசடி செய்து எடுத்துக்கொண்ட ஒரு துப்பட்டியைக் கண்டு பிடித்தார்கள். நூல்கள்: அஹ்மத், மாலிக்

மோசடி செய்தவன், தற்கொலை செய்தவன் ஆகியோர்களுக்காக நபி(ஸல்) அவர்கள் மையித்துத் தொழுகை நடத்த முன்வரவில்லை என இமாம் அஹ்மது அவர்கள் கூறுகிறார்கள்.

தலைவனுக்கு வேலையாட்கள் அனுப்பும் நன்கொடைகள் அபகரிக்கப்பட்ட பொருளைப் போன்றதுதான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், இப்னுமாஜா

சுத்தமில்லாத் தொழுகையையும், மோசடியால் கிடைத்த பொருளில் செய்த ஸக்காத்தையும் அல்லாஹ் ஏற்க மாட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: முஸ்லிம்)

திருடனோ திருடியோ அவர்கள் சம்பாதித்த பாவத்திற்கு, அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக - அவர்களின் கரங்களைத் தரித்து விடுங்கள். அல்லாஹ் மிகைத்தவனும், ஞானம் மிக்கோனுமாக இருக்கிறான். (அல்குர்ஆன் 5:38)

மூன்று திர்ஹம்கள் மதிப்புள்ள ஒரு பொருளைத் திருடியவனின் கையை நபியவர்கள் துண்டித்துள்ளார்கள் என இப்னு உமர்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

கால்தீனாருக்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் மதிப்புள்ள பொருளைத் திருடியவனின் கையை நபியவர்கள் துண்டித்துள்ளார்கள் என்று அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

கால்தீனார் மதிப்புள்ள பொருளைத் திருடியவனின் கையை வெட்டுங்கள். அதற்குக் குறைந்த மதிப்புள்ளதைத் திருடினால் வெட்டாதீர்கள்! என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: அஹ்மத்

மதீனாவில் 'மக்ஸூ மி' கிளையைச் சேர்ந்த ஒரு பெண், வீடுகளில் பொருட்களை இரவல் வாங்கி அதைத் திருப்பிக் கொடாமல் நான் வாங்கவில்லையெனக் கூறிக்கொண்டிருந்தாள். நபி(ஸல்) அவர்களிடம் விசாரணைக்கு வந்த போது அவளின் கையை வெட்டுமாறு உத்தரவிட்டார்கள். அப்பெண்ணின் கூட்டத்தினர் உஸாமா(ரலி) அவர்களிடம் வந்து அவளின் கையை வெட்டாமலிருக்கச் சிபாரிசு செய்யும்படி வேண்டினார்கள். உஸாமா(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்து 'வெட்ட வேண்டாம்' எனச் சிபாரிசு செய்தார்கள். நபி(ஸல்) அவர்கள், உஸாமாவே! அல்லாஹ் விதித்த தண்டனையை மாற்றும்படி கேட்கிறாயா? எனக் கூறிவிட்டு எழுந்து நின்று உங்களுக்கு முன் வந்த கூட்டத்தினர் கண்ணியமானவன் திருடினால் விட்டுவிடுவார்கள். பலவீனமானவன் திருடினால் தண்டனையை நிறைவேற்றுவார்கள். இதனாலேயே அவர்கள் அழிக்கப்பட்டனர் எவனிடம் என் ஆத்மா இருககிறதோ அவன் மீது ஆணையாக! என் மகள் பாத்திமா திருடினாலும் நான் அவளின் கையைத் துண்டிப்பேன் எனப் பிரசங்கம் நிகழ்த்தினார்கள். பின்னர் அப்பெண்ணின் கை துண்டிக்கப்பட்டது. நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

பிறர் பொருளின் மீது கையை வைப்பதிலிருந்தும் அல்லாஹ் எம்மைக் காப்பாற்றுவானாக!

## வழிப்பறி

அல்லாஹ்வுடனும் அவன் தூதருடனும் போர் புரிந்து, பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரிபவர்களுக்குத் தண்டனை இதுதான் (அவர்கள்) கொல்லப்படுதல், அல்லது தூக்கிலிடப்படுதல், அல்லது மாறு கால் மாறு கை வாங்கப்படுதல், அல்லது நாடு கடத்தப்படுதல் இது அவர்களுக்கு இவ்வுலகில் ஏற்படும் இழிவாகும் மறுமையில் அவர்களுக்கு மிகக்கடுமையான வேதனையுமுண்டு. (அல்குர்ஆன் 5:33)

ஒருவன் திருடினால் கையை வெட்டுங்கள், மீண்டும் அக்குற்றத்தைச் செய்தால் மீண்டும் காலை வெட்டுங்கள், என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அபூதாவூத், நஸயீ

## பொய்ச்சத்தியம்

அல்லாஹ்விடத்தில் செய்த வாக்குறுதியையும் தம் சத்தியப்பிரமாணங்களையும் அற்ப விலைக்கு விற்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயமாக மறுமையில் எவ்வித பாக்கியமும் இல்லை அல்லாஹ் அவர்களுடன் பேச மாட்டான். இன்னும், இறுதி நாளில் அவன் அவர்களை பார்க்கவும் மாட்டான் அவர்களைப்பரிசுத்தமாக்கவும் மாட்டான். மேலும், அவர்களுக்கு நோவினை மிக்க வேதனையும் உண்டு. (அல்குர்ஆன் 3:77)

எவன் பிறர்பொருளை அபகரிப்பதற்காகச் சத்தியம் செய்கிறானோ அவனை மறுமையில் அல்லாஹ் கோபத்துடன் சந்திப்பான் நூல்: புகாரீ, முஸ்லிம்

எனவும்,

ஒரு முஸ்லிமின் உரிமையைச் சத்தியம் செய்து பறிப்பவனுக்கு அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கி நரகத்தை கடமையாக்குகிறான். அது ஒரு தடியளவு மதிப்பு குறைந்ததாயிருப்பினும் சரியே! நூல்கள்: முஸ்லிம், நஸயீ, இப்னுமாஜா, மாலிக்

எனவும்,

மூவரை மறுமையில் அல்லாஹ் சுத்தப்படுதத மாட்டான், பேசவுமாட்டான். துன்பமளிக்கும் நரகவேதனை தான் அவர்களுக்குக் கிடைக்கும். அவர்கள் யாரெனில் தரையில் படும்படி உடை உடுத்துபவன், கொடுத்ததைச் சொல்லிக்காட்டுபவன், பொயச்சத்தியம் செய்து தன் பொருளை விற்பவன் நூல்கள்: முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ, இப்னுமாஜா

எனவும்,

எவன் அல்லாஹ் அல்லாதவைகள் மீது சத்தியம் செய்கிறானோ அவன் ஷிர்க் வைத்தவனாகிறான். நூல்கள்: திர்மிதீ, ஹாகிம், இப்னுஹிப்பான்

எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

## அநீதி இழைத்தல்

மேலும், அக்கிரமக்காரர்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றி அல்லாஹ் பராமுகமாக இருக்கிறான் என்று (நபியே!) நீர் நிச்சயமாக எண்ண வேண்டாம் அவர்களுக்கு (தண்டனையை) தாமதப்படுத்துவதெல்லாம், கண்கள் விரைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும் (அந்த மறுமை) நாளுக்காகத்தான்.

(அந்நாளில்) தங்களின் சிரங்களை (எப்பக்கமும் பாராமல்) நிமிர்த்தியவர்களாகவும், விரைந்தோடுபவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள் (நிலை குத்திய) அவர்களின் பார்வை அவர்கள் பக்ககம் திரும்பாது. இன்னும், அவர்களின் இதயங்கள் (திடுக்கங் கொண்டு) சூனியமாக இருக்கும்.

எனவே, அத்தகைய வேதனை அவர்களிடம் வரும் நாளை (நபியே!) நீர் மனிதர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! அப்போது அநியாயம் செய்தவர்கள் ‘‘எங்கள் இறைவனே! எங்களுக்குச் சற்றே அவகாசம் கொடுப்பாயாக! உன்னுடைய அழைப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் (உன்னுடைய) தூதர்களையும் பின் பற்றுகிறோம்! என்று சொல்வார்கள். (அதற்கு இறைவன்,) ‘‘உங்களுக்கு முடிவேயில்லை என்று இதற்கு முன்னர் நீங்கள் சத்தியம் செய்து கொண்டிருக்க வில்லையா?“ (அல்குர்ஆன் 14:42,44)

(என்றும்)

ஆனால், மக்களுக்கு அநியாயம் செய்து நீதமின்றி பூமியில் அட்டூழியம் செய்கிறவர்களின் மீதுதான் (குற்றம் சுமத்த) வழியிருக்கிறது. இத்தகையோருக்கு நோவினை செய்யும் வேதனையுண்டு. (அல்குர்ஆன் 42:42)

ஆனால், இறைநம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்து, அல்லாஹ்வை அதிகமாக தியானித்து, (தங்களுக்கு) அநியாயம் செய்யப்பட்ட பின்னர் (அதற்காக) பழிதீர்த்துக் கொண்டவர்களைத் தவிர (மற்றவர்கள் குற்றவாளிகள்தாம்). அநியாயம் செய்தவர்கள், தாங்கள் எங்கு திரும்பச் செல்லவேண்டும் என்பதையும் திட்டமாக(ப் பின்னர்) அறிந்து கொள்வார்கள். (அல்குர்ஆன் 26:227)

அநியாயம் செய்யும் ஊ(ரா)ரை (உம் இறைவன்) பிடிப்பானேயானால், இப்படித்தான் உம் இறைவனின் பிடி இருக்கும் - நிச்சயமாக அவனுடைய பிடி வேதனை மிக்கதாகவும், மிகக் கடினமானதாகவும் இருக்கும். (அல்குர்ஆன் 11:102)

எனவும் அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்.

அடியார்களே! எனக்கு நானே அநீதிதத்தை ஹராமாக்கியுள்ளேன். அதை உங்களுக்கிடையிலும் ஹராமாக்கியுள்ளேன். ஒருவருக்கொருவர் அநீதமிழைத்துக் கொள்ளாதீர்கள்! என அல்லாஹ் கூறுகிறான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்கள்: முஸ்லிம், திர்மிதீ

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள் தோழர்களை நோக்கி பிச்சைக்காரன் யார் தெரியுமா? எனக் கேட்டார்கள். தீனார் (பணம், காசு) இல்லாதவன் தான் பிச்சைக்காரன் என்று தோழர்கள் கூறினார்கள். இல்லை என்னுடைய உம்மத்துகளில் பிச்சைக்காரன் யாரெனில், தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு ஆகியவைகளை ஒழுங்காக நிறைவேற்றி அதிக நன்மைகளுடன் மறுமைக்கு வரும் ஒருவன். அவனோ அடித்தல், ஏசுதல், அவதூறு சொல்லல் ஆகிய அநீதமான செயல்களை பிறருக்குச் செய்துவிட்டு அதற்குரிய பரிகாரம் தேடாது மரணித்திருப்பான் இதனால் மறுமையில் அவனுடைய நன்மைகைளையெல்லாம் எடுத்து அநீதமிழைக்கப்பட்டவனுக்கு வழங்கப்படும். போதாவிட்டால் அநீதமிழைக்கப்பட்டவனின் தீமைகளை எடுத்து அவனுக்குக் கொடுக்கப்படும். அதனால் எந்த நன்மையும் இல்லாது பாவங்கள் அதிகரிக்கப்பட்ட நிலையில் நரகில் போடப்படுபவனே பிச்சைக்காரன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்கள்: முஸ்லிம், திர்மிதீ

அநீதமிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனைக்கு அஞ்சு! ஏனெனில் அவனுடைய பிரார்த்தனைக்கும் அல்லாஹ்வுக்குமிடையில் திரை கிடையாது. (அநீதமிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படும்) எனவும், எவன் பிறருடைய நிலத்திலிருந்து சாண் அளவாவது அபகரித்தானோ (அநீதமிழைத்தானோ) அவன் மறுமையில் ஏழு பூமிகளைக் கழுத்தில் தொங்கவிடப்படுவான். (அதைச் சுமந்தவனாக வேதனையனுவிப்பான்) எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

## தகாத உணவு

---

நீங்கள் உங்களுக்கிடையில் உங்கள் பொருட்களை முறைகேடாக உண்ணவேண்டாம்... (அல்குர்ஆன் 2:188)

உரிமையில்லாமல் பிறரின் பொருட்களில் மூழ்கியிருப்பவர்களுக்கு மறுமையில் நரகமே கதி என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: புகாரீ

அவர் அதிக தூரம் பயணம் செய்து தலைவிரிக்கோலமாக மாசுபடிந்தவராக தன் கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தி என் இரட்சகனே! எனக் கதறுகிறார். ஆனால் அவர் தன் உணவைப் பெறும் வழி தடுக்கப்பட்டதாக (ஹராமானதாக) இருக்கிறது. அவரருந்தும் பானம் தடுக்கப்பட்டதாக இருக்கிறது. அவரவருந்தும பானம் தடுக்கப்பட்டதாக இருக்கிறதுழூ அவரது மொத்த வாழ்க்கையே ஹராமான வழியில் தான் இருக்கிறது. இந்நிலையில் அவர் எவ்வாறு அல்லாஹ்விடமிருந்து பதிலை எதிர்பார்க்க முடியும்? என ஒரு வழிப்போக்கரைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நூல்: முஸ்லிம்

அனஸ்! உன் உழைப்பைச் சுத்தமானதாக்கிக் கொள்! தகாத உழைப்பிலிருந்து ஒரு கவளம் உடலில் சென்றால் நாற்பது நாளைக்குப் பிரார்த்தனைகள் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது எனவும், (நூல்: தப்ரானீ)

தகாத உணவை வாயில் வைப்பதைவிட மண்ணைக் கொண்டு அவன் வாயை நிரப்புவது மேலாகும் எனவும், (நூல்: அஹ்மத்)

உங்களுக்குரிய குணங்களை வித்தியாசமாக்கியது போன்று உங்கள் உழைப்பையும் அல்லாஹ் வித்தியாசப்படுத்தியுள்ளான். இவ்வுலகத்தை அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கும், விரும்பாதவர்களுக்கும் கொடுப்பான். ஆனால், மார்க்கப்பற்றையோ, தான் விரும்பியவர்களுக்கு மட்டுமே கொடுப்பான் எனவும், நூல்கள்: அஹ்மத், பைஹகீ

அதர்மத்திலிருந்து முளைத்த ஒரு மாமிசமும் சுவர்க்கம் புகாது. அதர்மத்திலிருந்து முளைத்த எல்லா மாமிசத்திற்கும் (உடலுக்கும்) நரகமே மிகத் தகுதியுடையது எனவும், நூல்கள்: அஹ்மத், பைஹகீ, தாரமீ

அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! இந்த ஒரு சுவனத்தை வெளியேற்றவா இவ்வாறு கஷ்டப்பட்டீர்கள்? என அபூபக்கர்(ரலி) அவர்களிடம் வினவப்பட்டது. ஆம்! என் உயிருடன் தான் அக்கவனம் வெளியேறுவதாயிருந்தாலும் அவ்வாறே செய்திருப்பேன். ஏனெனில் ஹராமான உணவருந்திய பின் உடலுக்கு நரகமே மிகத் தகுதியான இடம் என நபி(ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன் என்றார்கள். நூல்: புகாரீ

## தற்கொலை

இறைநம்பிக்கையாளர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படுகிற வர்த்தகம் அல்லாமல், ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள்! நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள்! நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது மிக்க கருணையுடையவனாக இருக்கிறான். வரம்பை மீறி அநியாயம் செய்பவரை விரைவாகவே நாம் (நரக) நெருப்பில் நுழையச்செய்வோம். அல்லாஹ்வுக்கு இது சுலபமானதேயாகும். (அல்குர்ஆன் 4:29, 30)

இதைப் பெரும் பாவங்களிலொன்றாக இஸ்லாம் கருதுகிறது. 'எவன் இரும்பு ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்வானோ அவன் அதே ஆயுதத்தால் நரகில் துன்பமனுவிப்பான். விஷமருந்தி உயிரைப் போக்கியவன் தன் கையில் விஷத்தை வைத்துக் கொண்டே நரகில் துன்பப்படுவான். மலையிலிருந்து குதித்து தற்கொலை செய்தவன். நரகக் குழியில் குதித்துக் கொண்டேயிருப்பான். எப்பொழுதும் மீட்சியைக் காணவே மாட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: புகாரீ, முஸ்லிம், திர்மிதீ, நஸாயீ

உங்களுக்கு முன் வாழ்ந்த ஒருவருக்குக் கையில் கட்டி உண்டாகிப் பெரும் வேதனைக்குள்ளாகவே அவர் கத்தியை எடுத்து அக்கட்டியை அறுத்து விட்டார். அதன் பலனாக இரத்தம் ஓடிக்கொண்டேயிருந்து இறந்து விட்டார். இதுபற்றி அல்லாஹ் 'என் அடியான் முந்திக் கொண்டான். நான் அவனுக்கு சுவனத்தை ஹராமாக்கி விட்டேன்' என்று கூறியதாக என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: புகாரீ, முஸ்லிம்

ஒரு விசுவாசியைச் சபிப்பது அவனைக் கொல்வது போன்றதாகும். ஒரு விசுவாசியின் மீது அபாண்டம் சுமத்துவது அவனைக் கொலை செய்வது போன்றதாகும். ஏதாவது ஒரு பொருளினால் தற்கொலை செய்பவன் அதனைக் கொண்டே மறுமையில் வேதனைக்குள்ளாக்கப்படுவான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: திர்மிதீ

## பொய்

... யார் வரம்பு மீறுவதுடன் பொய்யராகவும் இருக்கிறாரோ அவரை நிச்சயமாக அல்லாஹ் நேரான வழியில் செலுத்தமாட்டான். (அல்குர்ஆன் 40:28)

பொய் சொல்வோர் அழிந்தே போவர் (அல்குர்ஆன் 5:10)

உண்மையைக் கடைப்பிடியுங்கள் உண்மை நன்மையின் பக்கம் வழிகாட்டும். ஒரு மனிதன் உண்மையே பேசி அதிலேயே மூழ்கியிருப்பானாயின் அல்லாஹ்விடத்தில் உண்மையானவன் எனப் பதியப்படுவான். பொய்யைப் பயந்து கொள்ளுங்கள் ஏனெனில் பொய் தீமையின் பக்கம் வழிகாட்டும், தீமை நரகத்திற்கும் வழிகாட்டும். ஒரு மனிதன் பொய்யே உரைத்து அதிலேயே மூழ்கியிருப்பானாயின் அல்லாஹ்விடத்தில் பொய்யன் எனப் பதியப்படுவான் நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

எனவும்,

எவனிடம் நான்கு விஷயங்கள் இருக்கின்றனவோ அவன் நயவஞ்சகனாவான். நான்கில் ஒன்றிருந்தாலும் நயவஞ்சகத்திலிருந்து ஒன்றுள்ளவனாவான். அதை விடும் வரை நயவஞ்சகனாவான்.

1. பேசினால் பொய்யுரைப்பவன்

2. வாக்களித்தால் மாறு செய்பவன்.

3. வழக்காடினால் அநீதிமிழைப்பவன்.

4. உடன்படிக்கை செய்தால் அதை மீறுபவன் எனவும்,

நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

நயவஞ்சகனின் அடையாளம் மூன்று: அவன் தொழுதாலும், நோன்பு பிடித்தாலும், தான் ஒரு முஸ்லிம் என எண்ணிக் கொண்டாலும் சரியே (நயவஞ்சகனாவான்)

1. பேசினால் பொய்யுரைப்பான்.

2. வாக்களித்தால் மாறு செய்வான்.

3. நம்பினால் மோசம் செய்வான்.

எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

(மிஃராஜ் இரவிலே) ஒரு மனிதனைக் கண்டேன் அவன் கீழே படுத்திருக்கிறான். ஒரு வானவர் கையில் இரும்புக் குறடு வைத்துக் கொண்டு அவன் வாயைக் காது வரை கிழித்து விடுகிறார். அவன் பயங்கரமாகக் கதறிக் கொண்டிருக்கிறான். அடுத்த பக்கத்தில் வந்து கிழிக்கும் போது முன் கிழிக்கப்பட்டது சரியாகி விடுகிறது. அதன் பின் மறுபடியும் வந்து கிழிக்கிறார். இப்படியே மறுமை விசாரணை நாள் வரும் வரை நடந்து கொண்டிருக்கிறது. இவன் யார்? எதற்காக இவ்வாறு வேதனை

செய்யப்படுகிறான்? எனக் கேட்டேன். பொய் பேசிக் கொண்டேயிருந்தவன் தான் இவன். இவன் கூறும் பொய்கள் பல இடங்களுக்கும் பரவிவிடக் கூடியதாக இருந்தது என எனக்கு விடையளித்தார்கள் என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரீ)

விபச்சாரத்தில் ஈடுபடும் கிழவன், பொய் கூறும் மன்னன், பெருமையடிக்கும் பிச்சைக்காரன் ஆகிய மூவரையும் மறுமையில் அல்லாஹ் கருணைக்கண் கொண்டு பார்க்கவும் மாட்டான் அவர்களைச் சுத்தப்படுத்தவுமாட்டான் அவர்களுடன் பேசவுமாட்டான் அவர்களைக் கொடிய வேதனையிலாழ்த்துவான் நூல்: புகாரீ

எனவும்,

மற்றவர்கள் சிரிக்கவேண்டும் என்பதற்காகப் பொய் கூறுபவனுக்கு கேடு உண்டாவதாக! அவனுக்கே கேடு, அவனுக்கே கேடு நூல்: முஸ்லிம்

எனவும்,

மாபெரும் சதியாதெனில் மற்றவன் உண்மையென நம்பக்கூடியவாறு பொய் பேசுவதாகும். நூல்: அஹ்மத்

எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எவன் அல்லாஹ்வையும், மறுமையையும் விசுவாசிக்கிறானோ அவன் நல்லதையே பேசுவானாக! அல்லது வாய் மூடி இருப்பானாக! என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, முஸ்லிம், திர்மிதீ, நஸயீ

## கெட்ட நீதிபதி

....எவர்கள் அல்லாஹ் அருளியவற்றைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களே. (அல்குர்ஆன் 5:44)

---- எவர்கள் அல்லாஹ் அருளி (வேதக் கட்டளைகளின்) பிரகாரம் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக அக்கிரமக்காரர்கள் தாம். (அல்குர்ஆன் 5:45)

---- எவர்கள் அல்லாஹ் அருளிய (கட்டளைகளின்) பிரகாரம் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாகப் பாவிகள் தாம்! (அல்குர்ஆன் 5:47)

எனவும் அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்.

நீதிபதிகள் மூன்று வகையினர். ஒருவர் சுவர்க்கவாசி, இருவர் நரகவாசிகளாவர். உண்மையை அறிந்து அநீதியாகத் தீர்ப்புச் செய்பவரும், அறிவேயில்லாத நீதிபதியும் நரகத்திற்கு உரியவர்களாவர். நூல்கள்: அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா, ஹாகிம்

எவன் நீதிபதி வேலையைச் செய்கிறானோ அவன் கத்தியின்றி அறுக்கப்பட்டவனாகிறான். (அது அத்துணை கஷ்டமான தொழில்) நூல்கள்: அபூதாவூத், திர்மிதீ

மறுமையில் ஒரு நீதிபதியைக் கொண்டு வந்து விசாரணை செய்யப்படும். அந்த விசாரணையின் கஷ்டத்தைக் கண்டு நான் ஒரு ஈத்தம் பழத்திற்காகவாவது இருவருக்கிடையில் தீர்ப்பளிக்காது இருந்திருக்கக் கூடாதா? என எண்ணுவான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத் இப்னுஹிப்பான்

## அதிகாரியின் இலஞ்சம்

மேலும், நீங்கள் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் உண்ணாதீர்கள். மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருட்களிலிருந்து (எந்த)ஒரு பகுதியையும் அநீதமாக திண்பதற்கான வாய்ப்பைப் பெற அதிகாரிகளை அணுகாதீர்கள். (அல்குர்ஆன் 2:188)

என அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்.

இலஞ்சம் வாங்குபவனையும், கொடுப்பவனையும் அல்லாஹ் சபிப்பானாக. நூல்: திர்மிதீ, ஹாகிம்

ஒருவன் தன் சகோதரனுக்காக ஒரு விஷயத்தில் இன்னொருவரிடம் சிபாரிசு செய்து அது நிறைவேறிய பின், சிபாரிசு செய்யப்பட்டவனிடமிருந்து ஏதாவது அன்பளிப்புப் பெற்றுக் கொண்டால் அதுவும் இலஞ்சம் தான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: அபூதாவூத்

## ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் வேஷமிடுதல்

ஆணுக்கொப்பாகும் பெண்ணையும், பெண்ணுக்கொப்பாகும் ஆணையும் அல்லாஹ் சபிப்பானாக! என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: புகாரீ, அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா

விபசாரன், விபசாரியையோ, இணை வைத்து வணங்குபவளையோ அன்றி வேறு எந்தப் பெண்ணையும் விவாகம் செய்ய மாட்டான் விபச்சாரி, விபச்சாரனையோ, இணை வைத்து வணங்குபவனையோ அன்றி (வேறுயாரையும்) விவாகம் செய்ய மாட்டாள் - இது இறைநம்பிக்கையாளர்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது. (அல்குர்ஆன் 24:3)

மூன்று கூட்டத்தினருக்கு சுவர்க்கம் ஹராமாக்கப்பட்டுள்ளது. மதுவில் மூழ்கியிருப்பவன், பெற்றோரைத் துன்புறுத்துபவன், தன் மனைவியைக் கூட்டிக் கொடுப்பவன் ஆகியோரே அவர்களாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், பஸ்ஸார், ஹாகிம்

## ஆகாததை ஆகுமாக்குபவன்

ஆகுமாக்குபவனை நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள் (ஆகுமாக்கியவனையும் அப்படிச் செய்துவிடும் படி கேட்டவனையும் நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.) நூல்கள்: திர்மிதீ, நஸயீ

## சிறுநீர் கழித்த பின் சுத்தம் செய்யாமை

(நபியே!) உமது ஆடைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும் அசுத்தங்களை வெறுத்துவிடும். (அல்குர்ஆன் 74:4, 5)

## முகஸ்துதி

நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கிறார்கள். ஆனால்,அவன் அவர்களை வஞ்சித்து விடுவான். தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்கு (தங்களையும் தொழுகையாளிகளாக) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்:) இன்னும், மிகச் சொற்பமாகவே அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்கிறார்கள். (அல்குர்ஆன் 4:142)

இறைநம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப் போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்களின் தர்மங்களைப் பாழாக்கிக் கொள்ளாதீர்கள்! அ(செய்ப)வனுக்கு உவமை ஒரு வழுக்குப் பாறை போன்றவையாகும் அதன் மேல் சிறிது மண் படிந்துள்ளது அதன் மீது பெருமழை பெய்து (அதிலிருந்து சிறிது மண்ணையும் கழுவித்) துடைத்து விட்டது இவ்வாறே அவர்கள் செய்த - (தானத்)திலிருந்து யாதொரு பலனையும் அடைய மாட்டார்கள். இன்னும், அல்லாஹ் இறை மறுப்பாளர்களை நேர் வழியில் செலுத்துவதில்லை. (அல்குர்ஆன் 2:264)

இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால், தம் தொழுகையில் அலட்சியமாகவும் இருப்போர். அவர்கள் பிறருக்குக் காண்பிக்(கவேதான் தொழு)கிறார்கள். மேலும், அற்பமான (புழங்கும்) பொருள்களைக் (கொடுப்பதைவிட்டும்) தடுக்கிறார்கள். (அல்குர்ஆன் 107-4-7)

## கற்ற கல்வியை மறைத்தல்

---

நாம் இறக்கியருளிய தெளிவான அத்தாட்சிகள் மற்றும் நேர்வழியை மனிதர்களுக்கு வேதத்தில் தெளிவாக விளக்கிய பின்னர், (அவற்றிலிருந்து) ஏதேனும் ஒன்றை மறைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் சபிக்கிறான். இன்னும், அவர்களைச் சபிப்ப(தற்கான உரிமை பெற்ற)வர்களும் சபிக்கிறார்கள். (அல்குர்ஆன் 2:159)

தவிர வேதம் கொடுக்கப்பட்டோரிடம் அவர்கள் அதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும், அதை மறைக்கக் கூடாது என்று அல்லாஹ் உறுதி மொழி வாங்கியதை (அம்மக்களுக்கு நபியே! நீர் நினைவுபடுத்துவீராக) அப்பால், அவர்கள் அதைத் தங்களின் முதுகுகளுக்குப் பின்னால் எறிந்துவிட்டு அதற்குப் (பதிலாகச்) சொற்பகிரயத்தைப் பெற்றுக் கொண்டார்கள் - அவர்கள் (இவ்வாறு) வாங்கிக் கொண்டது மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 3:187)

எவன் அல்லாஹ்வுக்காகவன்றி உலக ஆதாயத்திற்காக கல்வி கற்கிறானோ அவன் சுவனவாடையைப் பெறமாட்டான். நூல்: அபூதாவூத்

அறிஞர்களிடம் வாதிட்டு வெல்வதற்கும், பாமரமக்களிடம் அறிவாளி எனப் பெயர் எடுப்பதற்கும், மக்களைத் தன்பக்கம் திருப்புவதற்கும் கல்வி கற்பனை அல்லாஹ் நரகில் நுழையவைப்பான். (நூல்: திர்மிதீ)

கற்றவன் ஒருவனிடம் மார்க்க சம்பந்தமாகக் கேள்வி கேட்டபின், அதற்குரிய சரியான விடை தெரிந்திருந்தும், அதை மறைப்பவனுக்கு மறுமையில் நெருப்புக் கடிவாளமிடப்படும். (நூல்: முஸ்லிம்)

யா அல்லாஹ்! பிறருக்குப் பிரயோசனமளிக்காத கல்வியை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன் என்று நபி(ஸல்) அவர்களின் பிரார்த்தனை இருந்தது. நூல்கள்: முஸ்லிம், திர்மிதீ, நஸயீ

## சதி செய்தல்

விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் மோசம் செய்யாதீர்கள். தவிர நீங்கள் (செய்வது அக்கிரமம் என) அறிந்து கொண்டே, உங்களிடம் உள்ள அமானிதப் பொருள்களிலும் மோசம் செய்யாதீர்கள். (அல்குர்ஆன் 8:27)

நிச்சயமாக அல்லாஹ் துரோகிகளின் சதியை நடைபெற விடமாட்டான். (அல்குர்ஆன் 12:52)

என அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான்.

நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று பேசினால் பொய்யுரைப்பான், வாக்களித்தால் வாக்களித்தால் மாறு செய்வான், நம்பினால் சதி செய்வான். நூல்கள்: புகாரீ, முஸ்லிம்

ஒப்பந்தம் செய்து கொண்ட இருவருடன், அவர்கள் தங்களுக்குள் சதி செய்யாதிருந்தால், நான் மூன்றாவதாக இருக்கிறேன் என அல்லாஹ் கூறுகிறான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: அபூதாவூத்)

## நன்மைகளைச் சொல்லிக் காட்டுதல்

விசுவாசிகளே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப் போல, கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினை செய்தும் உங்கள் ஸதகாவை (தான தருமங்களைப்) பாழாக்கி விடாதீர்கள். (அல்குர்ஆன் 2:264)

மூன்று கூட்டத்தினருடன் அல்லாஹ் மறுமையில் பேசமாட்டான் கருணைக் கண்கொண்டு பார்க்கமாட்டான். கொடிய வேதனைகள் அவர்களுக்கு உண்டு. பெருமைக்காக ஆடையை சுரண்டைக் காலுக்குக் கீழே வரும்படி உடுத்துபவன், செய்த நன்மைகளைச் சொல்லிக் காட்டுபவன், பொய்ச் சத்தியம் கூறி வியாபாரம் செய்பவன். நூல்: முஸ்லிம்

மூன்று கூட்டத்தினர் சுவனம் நுழைய மாட்டார்கள். பெற்றோரை நிந்திப்பவனும், மதுவில் மூழ்கியிருப்பவனும், செய்த நன்மைகளைச் சொல்லிக் காட்டுபவனும். நூல்கள்: நஸயீ, ஹாகிம், பஸ்ஸார்

சதி செய்பவனும், உலோபியும், செய்த தர்மங்களைச் சொல்லிக்காட்டுபவனும் சுவர்க்கம் நுழையமாட்டார்கள் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: நஸயீ, திர்மிதீ)

## விதியைப் பொய்யாக்குதல்

நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் (குறிப்பான) அளவின் (விதியின்) படியே படைத்திருக்கிறோம். (அல்குர்ஆன் 54:49)

நிச்சயமாக இக்குற்றவாளிகள் வழிகேட்டிலும் சித்தமிழந்தும் இருக்கின்றனர். இவர்கள் நரகத்திற்கு முகம் குப்புற இழுத்துச் செல்லப்படும் நாளில், இவர்களை நோக்கி, (உங்களை) நரக நெருப்பு

பொசுக்குவதை சுகித்துப் பாருங்கள் (என்று கூறப்படும்). நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கின்றோம். (அல்குர்ஆன் 54:47-49)

இயலாமை, இறப்பு ஆகியவற்றை அல்லாஹ் நியதிப்படுத்தியுள்ளான். நூல்: முஸ்லிம்

எல்லாச் சமூகத்தவர்களிலும் மஜூ ஸிகள் (நெருப்பை வணங்கும் மிகக் கெட்டவர்கள்) உள்ளனர். என் உம்மத்தில் மஜூ ஸிகள் விதியைப் பொய்யாக்குபவர்களாவர். நூல்: அஹ்மத்

இளைஞனே! நான் சில அறிவுரைகளைக் கற்றுத் தருகிறேன் அல்லாஹ்வை நீ மனதிற்கொள் அவன் உன்னைப் பாதுகாப்பான். அல்லாஹ்வை மனதில் கொள் நீ அவனை உன் முன் காண்பாய். நீ இறைஞ்சும் போது அல்லாஹ்விடமே இறைஞ்சு, நீ உதவி தேடுவதாக இருந்தால் அல்லாஹ்விடமே தேடு. இந்த உலகமே ஒன்று திரண்டு வந்து உனக்கு ஏதாவது நன்மை செய்திட முயன்றாலும் அது உனக்கு அல்லாஹ் ஏற்கனவே ஏற்படுத்தி வைத்துள்ளதைக் காட்டிலும் அதிகமாக எந்த நன்மையும் செய்திட முடியாது. இன்னும் இந்த உலகமே ஒன்று திரண்டு வந்து எதையும் கொண்டு உனக்கு ஊறு விளைத்திட முயன்றாலும் அது உனக்கு ஏற்கனவே குறித்து வைத்தவற்றைக் கொண்டல்லாமல் எந்தக் கெடுதலையும் செய்திடமுடியாது. (உனக்கு உரியவற்றை) விதிப்பதற்காக எழுதுகோல்கள் எடுக்கப்பட்டுவிட்டன. எழுதப்பட்ட பக்கங்கள் உலர்ந்தும் விட்டன எனவும் (நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: திர்மிதீ)

## கோளுரைத்தல்

(நபியே! எடுத்ததற்கெல்லாம்) சத்தியம் செய்யும் எந்த நீசனையும் நீர்வழிபடாதீர்! (அவன்) சதா (புறம் பேசிக் குற்றங் கூறி, கோள் சொல்வதையே தொழிலாகக் கொண்டு திரிபவன். அல்குர்ஆன் 68:10,11

என அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான். நபி(ஸல்) அவர்கள் இரண்டு கப்ருகளுக்கருகாமையில் நடந்து செல்லும் போது, இவர்கள் இருவரும் இப்போது வேதனையளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (அவர்கள் எண்ணப்படி) அவர்கள் பெரும் பாவங்கள் செய்யவில்லை. ஒருவர் சிறுநீர் கழித்தால் சுத்தம் செய்யமாட்டார் மற்றர் மக்களுக்கிடையில் கோள் சொல்லிக் கொண்டிருந்தார் எனக் கூறிவிட்டு, ஒரு பச்சை ஈத்தமட்டையை இரண்டாகக் கிழித்து ஒவ்வொரு கப்ரிலும் நட்டார்கள். இவையிரண்டும் காயாமல் இருக்கும் வரை வேதனைக் குறையக் கூடும் என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஹு தைபா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ

இரு முகங்களையுடைய கெட்ட சகுனங்களை நீங்கள் சந்திப்பீர்கள். ஒருவரிடம் ஒருவிதமாகவும் மற்றவரிடம் அவரைப்பற்றியும் கூறித்திரிவார்கள். இரண்டு நாக்கை உடையவனுக்கு மறுமையில் நரகில் இரு நெருப்பு நாக்குகள் அளிக்கப்படும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம், முஅத்தா)

## திட்டுதல் (சபித்தல்)

ஒரு முஸ்லிமைத் திட்டுவது கெட்டதாகும். அவனைக் கொலை செய்வது குஃப்ராகும். நூல்கள்: புகாரீ, திர்மிதீ, முஸ்லிம், நஸயீ

எனவும்,

சபித்துக் கொண்டேயிருப்பவர்கள் மறுமையில் சிபாரிசு செய்ய முடியாதவர்களாகவும், சாட்சியமளிக்க முடியாதவர்களாகவுமிருப்பார். (நூல்கள்: முஸ்லிம், அபூதாவூத்)

எனவும்,

ஒரு விசுவாசியைப் சபிப்பது அவனைக் கொலை செய்வது போன்றதாகும். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

கெட்ட வார்த்தை பேசுபவனும் பிறரைத் திட்டுபவனும், பிறரைக் குறைகூறுபவனும் விசுவாசியாக மாட்டான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்கள்: அஹ்மத், ஹாகிம்

ஒரு அடியான் ஏதாவதொரு பொருளை (மனிதனை, மிருகத்தை)ச் சபித்தால் அந்தச் சாபம் வானோக்கிச் செல்கிறது. அதைக் கண்டவுடன் வானக்கதவுகளெல்லாம் மூடப்பட்டுவிடும். அதன் பின் அந்தச் சாபம் பூமிக்குத் திரும்புகிறது. பூமியும் அதற்கு இடங்கொடுக்க மறுத்து விடும். வலது பக்கமும், இடது பக்கமும் திரும்பிப் பார்த்துவிட்டு எதனைச் சபித்தானோ அதனிடம் அது போகும். அப்பொருள் அச்சாபத்திற்கு அருகதையுடையதாக இல்லாவிடில் சபித்தவன் பக்கமே வந்து அவனிடம் அது சேர்ந்து கொள்ளும் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: அபூதாவூத், அஹ்மத்)

நபி(ஸல்) அவர்களுடன் நாங்கள் ஒரு பிரயாணத்திலிருந்தோம். ஒரு அன்ஸார் பெண்ணும் எங்களோடு பிரயாணத்திலிருந்தார். அவரை அவரது ஒட்டகம் வீழ்த்திவிட்டது. உடனே, அப்பெண் ஒட்டகத்தைத் திட்டினார், சபித்தார். இதைக்கண்ட நபி(ஸல்) அவர்கள் அந்த ஒட்டகையிலிருக்கும் அவள் பொருட்களையெல்லாம் எடுத்துக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள். அவள் சபிக்கப்பட்டவளாகி விட்டாள் என்றும் கூறினார்கள். அதன் பின் அப்பெண் தெரு வழியில் நடந்தால் யாரும் அவளைப் பொருட்படுத்தியதாகவோ, அவளுக்கு உதவி செய்வதைப் பார்த்ததோ கிடையாது என இம்ரான் இப்னு ஹுசைன்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். (நூல்கள்: முஸ்லிம், அஹ்மத்)

## வாக்கு மாறுதல்

விசுவாசிகளே! நீங்கள் (உங்கள்) உடன்படிக்கைகளைப் பூரணமாக நிறைவேற்றுங்கள். (அல்குர்ஆன் 5:1)

மறுமையில் மூவருடன் தான் வழக்காடுவதாக அல்லாஹ் கூறுகிறான். எனக்கா (உடன்படிக்கை) கொடுத்து அதை மீறுபவன் ஒரு சுதந்திரமானவனை விற்று அப்பணத்தால் பசி தீர்த்தவன் ஒருவனை வேலைக்கமர்த்தி வேலை முடிந்தவுடன் கூலி கொடுக்காது இருந்தவன் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: புகாரீ, இப்னுமாஜா)

## சோதிடனை உண்மைப்படுத்தல்

(நபியே!) நீர் அறியாத யாதொரு விஷயத்தையும் பின் தொடராதீர்! ஏனென்றால் நிச்சயமாக காது, கண், இருதயம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே (அதன்ன் செயலைப் பற்றி மறுமையில்) கேள்வி கேட்கப்படும். (அல்குர்ஆன் 17:36)

ஸைத் இப்னு காலித் ஜுஹ்னீ(ரலி) அவர்கள் மூலம்: ஒருநாள் நபி(ஸல்) அவர்கள் எங்களுக்காக சுப்ஹுத் தொழுகையைத் தொழுவித்தார்கள். சலாம் கொடுத்த பின் எங்களை முன்னோக்கி உங்கள் நாயன் என்ன சொல்கிறான் தெரியுமா? எனக் கேட்டார்கள். அல்லாஹ்வும், அவனுடைய தூதருமே

அறிவார்கள் என நாங்கள் கூறினோம். என்னுடைய அடியார்களில் சிலர் காபிர்களாகவும், சிலர் மூமின்களாகவும் இன்றைய பொழுதைத் தொடங்கியுள்ளார்கள். எவன் அல்லாஹ்வின் நல்லருளினால் மழை பெய்தது எனக் கூறினானோ அவன் என்னை விசுவாசித்தவனாகிறான். எவன் இந்த நட்சத்திரமாற்றத்தால் மழை பெய்தது எனக் கூறினானோ அவன் காபிராகி விட்டான் என்று அல்லாஹ் கூறுகிறான் என விளக்கமளித்தார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

## கணவனுக்குத் துரோகமிழைத்தல்

அல்லாஹ் சிலரைவிட மேன்மையாக்கி வைத்திருக்கிறான். தங்களின் சொத்துக்களிலிருந்து பெண்களுக்கு செலவு செய்து வருவதினால், ஆண்களே பெண்களை நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே, நல்லொழுக்கமுடைய பெண்கள் (தங்களின் கணவன்மார்களிடம்) விசுவாசமாகவும், பணிந்தும் நடப்பார்கள். (தங்களின் கணவன்மார்கள் இல்லாத சமயத்தில், (பாதுகாக்கப்பட வேண்டியவற்றை) அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு, பாதுகாத்துக் கொள்ளவார்கள் எந்தப் பெண்கள் விஷயத்தில் - அவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுகிறீர்களோ, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் (அப்போதும் திருந்தாவிட்டால்) அவர்களை (இலேசாக) அடியுங்கள். அவர்களுக்கு எதிராக எந்த வழியையும் தேடாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவன், வல்லமை உடையவன். (அல்குர்ஆன் 4:34)

கணவன் படுக்கைக்கு அழைக்கும்போது மனைவி மறுத்தால் பொழுது புலரும் வரை மலக்குகள் அவளைச் சபித்துக் கொண்டேயிருப்பார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத்)

கணவன் படுக்கைக்கு அழைக்கும் போது மனைவி மறுத்தால் அல்லாஹ் அவள் மீது கோபமடைகிறான். கணவனைத் திருப்திப்படுத்திய பின்னரே அல்லாஹ்வின் கோபம் தணியும். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம், நஸாயீ)

அல்லாஹ்வைக் கொண்டும், மறுமை நாளைக் கொண்டும் விசுவாசம் கொண்ட பெண், கணவன் வீட்டிலிருக்கும் போது சுன்னத்தான நோன்பு வைப்பதும், அவன் உத்தரவின்றிப் பிற ஆடவரை வீட்டுக்குள் நுழைய அனுமதிப்பதும் கூடாது. (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

எந்தப் பெண்ணாவது கணவன் திருப்தியுடனிருந்த நிலையில் இறப்பாளேயானால் சுவனம் புகுவாள். (நூல்கள்: திர்மிதீ, இப்னுமாஜா, ஹாகிம்)

அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நோவினை செய்கிறவர்களை நிச்சயமாக அல்லாஹ் இம்மையிலும், மறுமையிலும் சபிக்கிறான். மேலும், அவர்களுக்கு இழிவுதரும் வேதனையைச் சித்தப்படுத்தி இருக்கிறான். (அல்குர்ஆன் 33:57)

## உருவம் தீட்டுதல்

உருவங்களைச் செய்பவர்களை, மறுமையில் அவைகளுக்கு உயிர் கொடுக்கும்படி கூறி வேதனையளிக்கப்படும். (நூல்: புகாரீ, முஸ்லிம்)

உருவம் தீட்டுபவர்கள், அமைப்பவர்கள் யாவரும் நரகத்திற்குரியவர்களேயாவர். அவர்கள் அமைத்த உருவங்களைக் கொண்டே வேதனை செய்யப்படுவார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

எவன் உலகில் உருவங்களை அமைக்கிறானோ அதற்கு உயிர் கொடுக்கும்படி மறுமையில் வற்புறுத்தப்படுவான் ஆனால் உயிர் கொடுக்கவே முடியாது வேதனை செய்யப்படுவான். (நூல்: புகாரீ)

பார்க்கும் இரு கண்களும், கேட்கும் இரு காதுகளும், பேசும் நாவும் கொண்ட தீப்பிழம்பு ஒன்று மறுமை நாளில் நரகிலிருந்து வெளிப்படும். அது மூவருக்கு வேதனை செய்யும்படி ஏவப்பட்டுள்ளேன் என்று கூறி அம்மூன்று இனத்தவரையும் வேதனை செய்து கொண்டேயிருக்கும். அந்த மூன்று இனத்தவர்,

1. அல்லாஹ்வுக்கு இணை வைப்பவர்கள்.
2. அகம்பாவமுள்ள தலைவன்
3. உருவம் வரைபவன்

நூல்: திர்மிதீ

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள் ஒரு பிரயாணத்திலிருந்து வீட்டுக்குத்திரும்பிய போது வீட்டில் உருவங்கள் தீட்டப்பட்ட திரைச் சீலை தொங்குவதைக் கண்டார்கள். இதனைக் கண்டு முகம் சுளித்த நபி(ஸல்) அவர்கள் ஆயிஷாவே! மறுமையில் அதிக வேதனைக்காளாகுபவன் அல்லாஹ்வுடன் போட்டி போட்டு உருவங்களை அமைப்பவனாவான் எனக் கூறினார்கள். உடனே நான் அத்திரைச் சீலையைக் கிழித்துத் தலையணை (உறை)யாக்கிக் கொண்டேன் என அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரீ, முஸ்லிம்)

## ஒப்பாரி வைத்து அழுதல்

---

மேலும், சிறிதளவு அச்சத்தாலும், பசியாலும், உடமைகள், உயிர்கள், மற்றும் விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். இன்னும், (இவ்வேளையிலும்) பொறுமையாளர்களாக இருப்போருக்கு (நபியே!) நீர் நற்செய்தி கூறும்!

அவர்கள் (யாரெனில்), தங்களுக்குத் துன்பம் ஏதேனும் ஏற்படும்போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். மேலும், நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம் (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்) எனக் கூறுவார்கள்.

அத்தகையோரின் மீது அவர்களின் இறைவனிடமிருந்து நல்வாழ்த்துகளும், நற்கிருபையும் உண்டாகின்றன, இன்னும், அத்தகையோர்தாம் நேர் வழியை பெற்றவர்கள். (அல்குர்ஆன் 2:155, 156, 157)

சத்தமிட்டு ஒப்பாரி வைப்பவள், ஆடையைக் கிழிப்பவள், மொட்டையடித்துக் கொள்பவன் ஆகியோர்களை விட்டும் நாங்கள் விலகிக் கொண்டோம். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

இஸ்லாத்தில் இணைந்தவுடன் ஒப்பாரி வைத்து அழுவதில்லையென்று நாங்கள் நபியவர்களிடம் வாக்குறுதி செய்தோம் என உம்மு அதிய்யா(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். (நூல்கள்: புகாரீ)

ஓலமிட்டு அழுபவள் மரணத்திற்கு முன் தௌபா செய்யவில்லையானால் தாரால் (தாரினால்) சட்டை போடப்பட்டு நரகில் வேதனை செய்யப்படுவாள். (நூல்கள்: முஸ்லிம், இப்னுமாஜா)

## கொடுமை செய்தல்

(அளவு மீறி) மனிதர்கள் மீது அக்கிரமங்கள் செய்து நியாயமின்றிப் பூமியில் கொடுமை செய்வோருக்கு எதிராகத்தான் (குற்றம் சாட்ட) வழி இருக்கிறது. இத்தகையோருக்கு மிகத்துன்புறுத்தும் வேதனையுண்டு. (அல்குர்ஆன் 42:42)

ஹாரூன் (என்பவன்) மூஸாவுடைய ஜனங்களில் உள்ளவன் எனினும் அவர்கள் மீது அவன் அக்கிரமங்கள் செய்யத் தலைப்பட்டான்........... (அல்குர்ஆன் 28:76)

## வரம்பு மீறுதல்

(நபியே! உம்முடைய பொருட்களில் ஒன்றையுமே செலவு செய்யாது) உம்முடைய கையைக் கழுத்தில் மாட்டிக் கொள்ளாதீர்! மேலும் (உம்மிடம் இருப்பதையெல்லாம் கொடுத்து) உம்முடைய கையை முற்றிலும் விரித்து விடாதீர்! அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராகவும், முடைப்பட்டவராகவும் தங்கிவிடுவர். (அல்குர்ஆன் 17:29)

## அயல்வீட்டாரைத் துன்புறுத்தல்

மேலும், அல்லாஹ்வையே வணங்குங்கள் அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிராயணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் உபகாரம் செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 4:36)

அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர்கள் தம்முடைய விருந்தினரைக் கண்ணியப்படுத்துவாராக! எவர் அல்லாய்வையும், இறுதிநாளையும் நம்பினார்களோ அவர்கள் தம் அண்டை வீட்டாரிடம் அழகான முறையில் உறவாடுவாராக! மேலும், எவர் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டார்களோ அவர்கள் நல்லதையே கூறுவார்களாக! அல்லது மௌனமாக இருந்து விடுவாராக! (நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூ தாவூத்)

எனவும், அண்டை வீட்டான் பசித்திருக்கும்போது வயிறாரா உண்பவன் மூமினல்லன். (நூல்கள்: ஹாகிம், பைஹகீ)

## பரிகாசம், புறம் பேசல்

இறைநம்பிக்கையாளர்களே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்யவேண்டாம். ஏனெனில், (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம். (அவ்வாறே) பெண்கள் மற்றப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்)- ஏனெனில், இவர்கள் அவர்களை விடமேலானவர்களாக இருக்கலாம். இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள். இன்னும், (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால்

அழைக்காதீர்கள். நம்பிக்கை கொண்ட பின் (அவ்வாறு தீய) பட்டப்பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும். இவற்றிலிருந்து மீளாதவர்கள் அநியாயக்காரர்களாவார்கள். (அல்குர்ஆன் 49:11)

இறை நம்பிக்கையாளர்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் ஏனெனில், நிச்சயமாக எண்ணங்களில் சிலபாவங்களாக (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். மேலும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன் மிக்க கிருபை செய்பவன். (அல்குர்ஆன் 49:12)

இறைநம்பிக்கையுள்ளஆண்களையும், இறைநம்பிக்கையுள்ள பெண்களையும் அவர்கள் செய்யாத ஒன்றைக் கூறி, நோவினை செய்கிறவர்கள் நிச்சயமாக அவதூரையும், வெளிப்படையான பாவத்தையுமே சுமந்து கொள்கிறார்கள். (அல்குர்ஆன் 33:58)

மறுமையில், மனிதர்களில் மிகக் கெட்டவன் யாரெனில், துன்பம் பொறுக்க முடியாது அவனைக் கண்டு மற்றவர்கள் ஒதுங்குவார்களே அவன் தான். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் சகோதரனாவான் சகோதர முஸ்லிமுக்கு அநீதமிழைப்பதோ, அவரை அவனமானப்படுத்துவதோ, பழிப்பதோ கூடாது. (நூல்கள்: முஸ்லிம், திர்மிதீ)

ஒரு முஸ்லிமுடைய உயிரும், உடமையும், மானமும் மற்ற முஸ்லிமுக்கு விலக்கப்பட்டதாகும். (ஹராமாகும்) (நூல்: முஸ்லிம்)

ஒரு முஸ்லிமைத் தூஷிப்பது கெட்ட காரியமாகும் அவனைக் கொலை செய்வது கு∴ப்ராகும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

அல்லாஹ்வின் தூதரே! ஒரு பெண் இரவெல்லாம் நின்று வணங்குகிறாள். பகலெல்லாம் நோன்பு வைக்கிறாள். ஆனால், அண்டை வீட்டாருடன் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கிறாள். இவளின் நிலையென்ன? எனக் கேட்கப்பட்டதற்கு அவள் நரகத்திற்குரியவள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்கள்: அஹ்மத், ஹாகிம்)

நான் மி∴ராஜ் யாத்திரை செய்யும்போது சிலருடைய நகங்கள் பித்தளை போன்று கூர்மையாக இருப்பதையும், அந்நகங்களால் தங்கள் முகங்களைக் கீறிக் கிழித்துக் கொண்டுமிருக்கும் கொடிய தண்டனையையும் கண்டு, ஜீப்ரீலே! இவர்கள் யார்? எனக் கேட்டேன். பிற முஸ்லிம்களின் மானத்தைப் போக்கிக் கொண்டு வாழ்ந்தவர்கள் தான் இவர்கள் எனப் பதிலளித்தார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: அபூதாவூத்)

தர்மத்தையும், நன்மையானவற்றையும், மனிதர்களிடையே சமாதானம் செய்து வைப்பதையும் தவிர, அவர்களின் இரகசியப் பேச்சில் பெரும்பாலானவற்றில் எந்த விதமான நலமும் இல்லை. எனவே, அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி இதைச் செய்கிறவருக்கு நாம் மகத்தான நற்கூலியை வழங்குவோம். (அல்குர்ஆன் 4:114)

நன்மையை ஏவுதல், தீமையை விலக்குதல், அல்லாஹ்வைத் துதி செய்தல் ஆகிய பேச்சுக்களைத் தவிர ஏனைய பேச்சுகளெல்லாம் ஆதமுடைய மகனுக்குக் கேடானதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியததாக அன்னை உம்மு ஹபீபா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்கள்: திர்மிதீ, இப்னுமாஜா)

மனிதர்களுக்கிடையில் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பொய்யுரைப்பவன் பொய்யனல்லன். (நூல்: புகாரீ)

மூன்று இடங்களில் பேசப்படும் பேச்சுக்கள் உண்மையா? பொய்யா? என்று பொருட்படுத்தப்பட மாட்டாது.

1. யுத்த களத்தில்

2. மனிதர்களிடையில் ஒற்றமை ஏற்படுத்தலில்

3. கணவன் மனைவிக்கிடையிலான ஊடலில் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: முஸ்லிம்)

இறைநம்பிக்கையுள்ள ஆண்களையும், இறைநம்பிக்கையுள்ள பெண்களையும் அவர்கள் செய்யாத ஒன்றைக் கூறி, நோவினை செய்கிறவர்கள் நிச்சயமாக அவதூரையும், வெளிப்படையான பாவத்தையுமே சுமந்து கொள்கிறார்கள். (அல்குர்ஆன் 33:58)

மேலும், அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோதிலும், நீர் அவர்களை விழித்துக் கொண்டிருப்பவர்களாகவே எண்ணுவீர் அவர்களை நாம் வலப்புறமும் இடப்புறமுமாக புரட்டுகிறோம் தவிர, அவர்களின் நாய் தன் இரண்டு முன்னங்கால்களையும் வாசற்படியில் விரித்(துப் படுத்)திருக்கிறது அவர்களை நீர் உற்றுப்பார்த்தால், அவர்களைவிட்டும் வெருண்டு ஓடிப் பின்வாங்குவீர் அவர்களில் நின்றும் உண்டாகும் பயத்தைக் கொண்டு நிரம்பிவிடுவீர். (அல்குர்ஆன் 18:28)

உம்மைப் பின்பற்றிய விசுவாசிகளிடம் புஜம் தாழ்த்தி (பணிவாக) நடந்து கொள்வீராக! (அல்குர்ஆன்: 26:215)

எவன் என் நேசர்களைத் துன்புறுத்துகிறானோ அவனோடு நான் சண்டையிடுவேன் என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: புகாரீ)

அபூபக்கரே! அவர்களைக் கோபப்படுத்தி விட்டீர்களா? நிச்சயமாக அல்லாஹ்வையே கோபமாக்கிக் கொண்டீர்! என நபி(ஸல்) அவக்ாள் கூறினார்கள். உடனே அபூபக்கர்(ரலி) அவர்கள் திரும்பிச் சென்று, நண்பர்களே! (என் பேச்சினால்) உங்களைக் கோபமடையச் செய்து விட்டேனா? எனக் கேட்டார்கள் இல்லை! அல்லாஹ் உங்களுக்குப் பிழை பொறுப்பானாக! என அம்மூவரும் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

(நபியே!) தங்களின் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பி, காலையிலும், மாலையிலும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பபோரை நீர் விரட்டி விடாதீர்! (அல்குர்ஆன் 6:52)

(நபியே!) எவர்கள் தங்கள் இறைவனின் பொருத்தத்தை நாடி, அவனையே காலையிலும், மாலையிலும் (பிரார்த்தனை செய்து) அழைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடன் நீரும் (உம் கஷ்டங்களைச் சகித்துப்) பொறுத்திருப்பீராக! இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை நீர் விரும்பி அத்தகைய நல்ல(வர்களை) விட்டும் உம் கண்களைத் திருப்பிவிடாதீர்! (அல்குர்ஆன் 18:29)

## மமதையும், தற்பெருமையும்

பூமியில் (பெருமையுடன்) கர்வங்கொண்டு நீங்கள் நடக்கவேண்டாம். (ஏனென்றால்) நிச்சயமாகப் பூமியைப் பிளந்து விடவோ அல்லது மலை உச்சிக்கு உயர்ந்து விடவோ உம்மால் முடியாது. (அல்குர்ஆன் 17:37)

.........பூமியில் பெருமையடித்துக் கொண்டும் நடக்காதே! கர்வங்கொண்டு பெருமையடிக்கும் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 31:18)

கரண்டைக்காலுக்குக் கீழாக வந்த ஆடைகள் யாவும் நரகத்திற்குரியதாகும். (நூல்: புகாரீ)

பெருமையடித்துக் கொள்வதற்காக, ஆடையைக் கரண்டைக் காலுக்குக் கீழாக உடுத்தி இழுத்துச் செல்பவனை மறுமையில் அல்லாஹ் (கருணைக் கண் கொண்டு) நோக்கமாட்டான். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம், திர்மிதீ)

எனவும், மூவருடன் மறுமையில் அல்லாஹ் பேச மாட்டான்.

1. பெருமையுடன் ஆடையைப் பூமியில் பட உடுத்துபவன்.

2. செய்த உதவியைச் சொல்லிக் காட்டுபவன்

3. பொய்ச் சத்தியம் கூறி விற்பனை செய்பவன் (நூல்: அபூதாவூத்)

ஒரு விசுவாசியின் ஆடை முன்னங்காலுடன் நின்று விடவேண்டும். கரண்டைக் கால் வரை இருப்பது குற்றமல்ல. அதற்குக் கீழ் வந்தால் அது நரகத்திற்குரியதாகும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: அஹ்மத், நஸாயீ)

## ஆண்கள் பட்டும், தங்கமும் அணிதல்

எவன் இவ்வுலகில் பட்டாடையை அணிந்தானோ மறுமையில் அதையணியும் பாக்கியம் பெறமாட்டான். (சுவர்க்கம் செல்லமாட்டான்) (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

தங்கம், வெள்ளிப் பாத்திரங்களில் உண்பதையும், குடிப்பதையும் பட்டாடைகளை அணிவதையும், அதில் உட்காருவதையும் நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என அபூஹுதைபா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரீ)

ஒரு மனிதரின் கையில் தங்கத்தினாலான மோதிரம் இருப்பதை நபியவர்கள் கண்டு அதனைக் கழற்றிவிட்டு, யாரும் நரகத்து நெருப்புத் துண்டத்திலிருந்து ஒரு துண்டை அணிந்து கொள்வார்களா? எனக் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

ஒரு கையில் தங்கத்தையும், மற்றொரு கையில் பட்டாடையையும் எடுத்துக் காண்பித்து, இவையிரண்டும் என் சமூகத்து ஆண்களுக்கு ஹராமானதாகும் (விலக்கப்பட்டதாகும்) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: அபூதாவூத், நஸாயீ)

## அல்லாஹ்வுக்கன்றி அறுத்தல்

எதன் மீது, (அறுக்கும்போது) அல்லாஹ்வின் பெயர் கூறப்படவில்லையோ அதைப் புசிக்காதீர்கள் - நிச்சயமாக அது பாவமாகும் நிச்சயமாக ஷைத்தான்கள் தங்களின் நண்பர்களை உங்களோடு (வீண்)

தர்க்கம் செய்யுமாறு தூண்டுகிறார்கள் - நீங்கள் அவர்களுக்கு வழிபட்டால் நிச்சயமாக நீங்களும் இணைவைப்பவர்களாக ஆவீர்கள். (அல்குர்ஆன் 6:121)

## அந்நியனைத் தகப்பனாக ஏற்றல்

தன் தகப்பன் இவனல்லன் என அறிந்திருந்தும் அந்நியனைத் தகப்பன் எனக் கூறுபவனுக்குச் சுவனம் ஹராமாகி விடும். (நூல்: புகாரீ)

தன் சொந்தத் தகப்பனைப் புறக்கணித்து விட்டு வேறொருவனைத் தகப்பனாக ஏற்றுக் கொள்பவன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! (நூல்: புகாரீ)

தன் சொந்தத் தகப்பனைப் புறக்கணிக்காதீர்கள்! அவ்வாறு செய்பவன் காஃபிராவான் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: புகாரீ)

(எனவே) நீங்கள் (எடுத்து வளர்த்த) அவர்களை அவர்களின் தந்தைய(ரின் பெய)ர்களைச் சொல்லி (இன்னாரின் பிள்ளையென) அழையுங்கள் - அதுவே அல்லாஹ்விடம் நீதமுள்ளதாகும். ஆனால், அவர்களுடைய தந்தைய(ரின் பெய)ர்களை நீங்கள் அறியவில்லையாயின், அவர்கள் உங்களுக்கு சன்மார்க்க சகோதரர்களாகவும், உங்களுடைய நண்பர்களாகவும் இருக்கிறார்கள் (முன்னர்) இது பற்றி நீங்கள் தவறு செய்திருந்தால், உங்கள் மீது குற்றமில்லை. ஆனால், உங்களுடைய இதயங்கள் வேண்டுமென்றே கூறினால் (உங்கள் மீது குற்றமாகும்) அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 33:5)

## மேலதிக நீரைத்தடுத்தல்

மற்றவனுடைய பயிர் செழிப்பாக வளரக்கூடாது என்பதற்காக மேலதிக நீரைத் தடுத்து விடாதீர்கள். (நூல்: அஹ்மத்)

மறுமை நாளில் மூவருடன் அல்லாஹ் பேசமாட்டான், பரிசுத்தப்படுத்தமாட்டான், கொடிய துன்பத்தை அவர்களுக்களிப்பான்

1. தாகித்தவனுக்குக் கொடுக்காது மேலதிக நீரை தடுத்தவன்.

2. உலக நன்மையை எதிர்பார்த்து ஒரு தலைவனுக்கு வாக்களித்தவன்.

3. பொய்ச்சத்தியம் கூறி விற்பனை செய்பவன்.

எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

(நபியே!) நீர் கூறும்! உங்களின் தண்ணீர் பூமியினுள் (உறிஞ்சப்பட்டுப்) போய் விட்டால், அப்பொழுது ஓடும் நீரை உங்களுக்குக் கொண்டு வருபவன் யார் என்பதை கவனித்தீர்களா? என்று (எனக்கு அறிவியுங்கள்). (அல்குர்ஆன் 67:30)

‘‘மேலும், (பயிர்களிலிருந்து எதுவும் பெற முடியாதவர்களாகத்) தடுக்கப்பட்டு விட்டோம்“ (என்றும் கூறிக் கொண்டிருப்பீர்கள்). அன்றியும், நீங்கள் குடிக்கும் நீரைக் கவனித்தீர்களா? மேகத்திலிருந்து அதை நீங்கள் இறக்கினீர்களா? அல்லது நாம் இறக்கி வைக்கிறாமா? நாம் நாடினால், அதைக்

கைப்புள்ள தாக்கியிருப்போம் (இவற்றுக் கெல்லாம்) நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா? (அல்குர்ஆன் 56: 68-70)

## அளவை நிறுவைகளில் மோசடி செய்தல்

அளவு (எடையில்) மோசம் செய்பவர்களுக்குக் கேடுதான். அவர்கள் மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கும்போது நிறைவாக அளந்து வாங்குகிறார்கள். ஆனால், அவர்கள் அளந்தோ, நிறுத்தோ கொடுக்கும்போது குறை(த்து நஷ்டமுண்டா)க்கு கிறார்கள். நிச்சயமாக அவர்கள் எழுப்பப்படுபவர் களென்பதை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லையா? மகத்தான ஒரு நாளுக்காக, (அல்குர்ஆன் 83: 1-5)

(வியாபாரிகளே!) நீங்கள் பெரும் பொறுப்புகள் இரண்டைச் சுமந்துள்ளீர்கள்! அளவையிலும், நிறுவையிலும் (மோசடி செய்யாது) கவனமாக இருங்கள். ஏனெனில், இவைகளுக்காகவே உங்கள் முன் வந்த கூட்டத்தினர் அழிக்கப்பட்டனர் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: திர்மிதீ)

நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள் நிறுத்தால் சரியான எடையைக் கொண்டு நிறுங்கள். இது (உங்களுக்கு) நன்மையையும் மிக்க அழகான பலனையும் தரும். (அல்குர்ஆன் 17:35)

அநாதையின் பொருளின் பக்கம் அவன் பிராயத்தை அடையும்வரை அழகான முறையிலன்றி நீங்கள் நெருங்காதீர்கள் அளவையும், நிறுவையையும் நீதத்தைக் கொண்டு நிரப்பமாக்குங்கள் நாம் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு மீறி கஷ்டப்படுத்துவதில்லை நீங்கள் பேசும்பொழுது அதனால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராக இருந்த போதிலும் நியாயமே பேசுங்கள் அல்லாஹ்வுக்கு (நீங்கள் கொடுத்த) உறுதி மொழியை நிறைவேற்றுங்கள். நீங்கள் நினைவு (கூர்ந்து நடந்து) கொள்ளும் பொருட்டே அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கிறான். (அல்குர்ஆன் 6: 152)

(நபியே!) மனிதர்களில் ஒருவன் (ஒரு வகையில்) இருக்கிறான் உலக வாழ்க்கை பற்றிய அவன் பேச்சு உம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் தன் இதயத்தில் உள்ளது பற்றி (சத்தியஞ் செய்து) அல்லாஹ்வையே சாட்சியாகக் கூறுவான் (உண்மையில்) அ(த்தகைய)வன்தான் (உம்முடைய) கொடிய பகைவனாவான். (அல்குர்ஆன் 2: 204)

## அல்லாஹ்வின் சோதனையில் அவநம்பிக்கை வைத்தல்

அவர்களுக்கு நினைவூட்டப்பட்ட நற்போதனைகளை அவர்கள் மறந்துவிட்டபோது, அவர்களுக்கு (முதலில்) எல்லாப் பொருட்களின் வாயில்களையும் நாம் திறந்து விட்டோம் - பின்னர், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்த வேளை (நம் வேதனையைக் கொண்டு) அவர்களை திடீரெனப் பிடித்துக் கொண்டோம் அப்போது அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாக ஆகி விட்டனர். (அல்குர்ஆன் 6:44)

## அல்லாஹ்வின் நேசர்களைத் துன்புறுத்தல்

இறைநம்பிக்கையாளர்களே! உங்களில் எவரேனும் தன் மார்க்கத்தைவிட்டு மாறிவிட்டால் (அல்லாஹ்வுக்கு அதனால் நஷ்டமில்லை) அப்பொழுது அல்லாஹ் வேறு ஒரு கூட்டத்தாரைக் கொண்டு வருவான் அவன் அவர்களை நேசிப்பான் அவனை அவர்களும் நேசிப்பார்கள் அவர்கள் இறைநம்பிக்கையாளர்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள். இறைமறுப்பாளர்களிடம் கடுமையாக இருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள். நிந்தனை செய்வோரின் நிந்தனைக்கு அஞ்சமாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருட்கொடையாகும். இதை அவன் நாடியவருக்குக் கொடுக்கிறான். அல்லாஹ் மிகவும் விசாலமானவனும் (எல்லாம்) நன்கறிந்தவனுமாக இருக்கிறான். (அல்குர்ஆன் 5:54)

இவ்வாறான அடிமையொருவனை அல்லாஹ் விரும்பிக் கொண்டால், இன்னாருடைய மகன் இன்னாரை நான் நேசிக்கிறேன் என்று ஜிப்ரீல்(அலை) அவர்களிடம் அல்லாஹ் கூறுவான். உடனே ஜிப்ரீல் (அலை) அவர்கள் வானவர்கள் அனைவருக்கும் (மலக்குகளுக்கு) இன்னாருடைய மகன் இன்னாரை அல்லாஹ் நேசிக்கிறான் நீங்களும் அவரை நேசியுங்கள் என்று சப்தமிடுவார். வானவர்கள் யாவரும் அவ்வடியானை நேசிப்பார்கள். உடனே அவனுக்குப் பூமியில் ''கேட்டது கிடைக்கும்' தன்மை உண்டாகிவிடுகிறது. (வலியுல்லாஹ்) அல்லாஹ்வின் நேசனாகி விடுகிறான். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

## தனித்துத் தொழுதல்

பாங்குச் சத்தம் கேட்டபின் ஜமாஅத் தொழுகைக்குச் செல்லாது தனித்துத் தொழுவது பெரும் பாவமாகும். விரோதியின் பயம், நோய் போன்ற காரணங்களைத் தவிர்த்து, வேறு எக்காரணங்களுக்காவும் ஜமாஅத் தொழுகையைத் தவற விடுவதற்கு அனுமதி கிடையாது தனித்துத் தொழ முடியாது. 'எவன் பாங்குச் சத்தம் கேட்டு, காரணமின்றி ஜமாஅத் தொழுகைக்குச் செல்லவில்லையோ அவனுடைய தொழுகை நிறைவேறாது. (தனித்துத் தொழுதால் தொழுகை நிறைவேறாது) என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதும், விடுவதற்குரிய காரணம் எது? எனத் தோழர்கள் கேட்டனர். விரோதிகளின் பயம் அல்லது நோய் என நபி(ஸல்) அவர்கள் விடையளித்தார்கள். (நூல்: ஹாகிம்)

இரு கண்ணும் தெரியாத ஒருவர் நபியர்வகளிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! எனக்கு வழிகாட்டி யாருமில்லை பள்ளிவாசலுக்கு வந்து ஜமாஅத்துத் தொழுகையில் கலந்து கொள்ள இயலாதவனாக இருக்கின்றேன். நான் வீட்டிலேயே தொழுது கொள்வதற்கு அனுமதியுண்டா? எனக் கேட்டார். தொழுது கொள்ளலாம்' என நபியவர்கள் விடையளித்தார்கள். அவர் திரும்பிப் போகும் போது மீண்டும் அவரை அழைத்து, பாங்குச் சப்தம் உமக்குக் கேட்கிறதா? என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஆம்! கேட்கிறது என அந்நபர் பதிலளித்தார். அப்படியானால் கட்டாயம் ஜமாஅத்திற்குச் செல்லத்தான் வேண்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்கள்: அபூதாவூத், முஸ்லிம்)

என் வசம் என் ஆத்மா இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! தொழுகைக்காக பாங்கு கூறப்பட்டதும், ஒருவரை இமாமத் செய்யச் சொல்லி விட்டு, (ஊருக்குச் சென்று) ஜமாஅத்திற்கு செல்லாதவர்களின் வீட்டை நெருப்பு வைத்துக் கொளுத்தி விட எண்ணுகிறேன் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

இறைநம்பிக்கையாளர்களே! ஜு ம்ஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டு விட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க (பள்ளிகளுக்கு) விரைந்து செல்லுங்கள் -

நீங்கள் அறிபவர்களாக இருப்பின், இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும். (அல்குர்ஆன் 62:9)

எவன் காரணமின்றி ஜு ம்ஆவைத் தவற விடுகிறானோ அவனை முனாபிக் (நயவஞ்சகன்) எனப் பதியப்படும். நூல்: நஸயீ

எவன் அலட்சியமாக மூன்று ஜு ம்ஆக்களைத் தவற விடுகிறானோ அவனுடைய உள்ளத்தில் முத்திரையிடப்பட்டு விடும். (நேர்வழியைத் தவறவிட்டவன் என்பதாக) நூல்:அபூதாவூத்

வயது வந்த எல்லோருக்கும் ஜு ம்ஆ கட்டாயமாகும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: நஸயீ)

சல்மான் பாரிஸீ(ரலி) அவர்களின் மூலம்: ஒரு மனிதன் வெள்ளிக்கிழமைகளில் குளித்துத் துப்புரவாகி, தலைக்கு எண்ணெய் இட்டு அழகாக வாரி, மணம் பூசிக்கொண்டு, பள்ளிவாசலுக்குச் சென்று, அங்கிருப்பவர்களைக் கடந்து செல்லாமல் தொழுது, இமாம் குத்பா ஓதும் போது வாய்மூடி மௌனமாக இருப்பானேயானால், அடுத்த ஜு ம்ஆத்தினம் வரை அவனுடைய பிழை பொறுக்கப்படும். நூல்கள்: புகாரீ, அஹ்மத்

அபூஹு ரைரா(ரலி) அவர்கள் மூலம்: யாராவது ஒருவன் வெள்ளிக்கிழமைகளில் குளித்து, நேரகாலத்துடன் பள்ளிவாசலுக்குச் சென்றால் ஒரு ஒட்டகை குர்பான் கொடுத்த நன்மையைப் பெறுகிறான். இரண்டாம் நேரத்தில் சென்றவன் ஒரு மாட்டைக் குர்பான் செய்த நன்மையையும், மூன்றாம் நேரத்தில் சென்றவன் ஒரு ஆட்டைக் குர்பான் செய்த நன்மையையும், நாலாம் நேரத்தில் சென்றவன் ஒரு கோழியைக் குர்பான் செய்த நன்மையையும், ஐந்தாம் நேரத்தில் சென்றவன் ஒரு முட்டையைக் குர்பான் செய்த நன்மையையும் பெறுகிறான். இமாம் குத்பா ஓத ஆரம்பித்ததும் அதைக் கேட்பதற்கு மலக்குகள் யாவரும் வந்துவிடுவார்கள் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ)

## மரண சாசனத்தின் மூலம் தீங்கிழைத்தல்

இன்னும்,உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் - அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால், உங்களுக்குப் பாதி பாகம் உண்டு அவர்களுக்குப் பிள்ளை இருந்தால், அவர்கள் விட்டுச் சென்றவற்றிலிருந்து உங்களுக்கு கால் பாகம்தான் - (இதுவும்) அவர்கள் செய்திருக்கிற மரண சாஸனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான் - தவிர உங்களுக்குப் பிள்ளையில்லாதிருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்குக் கால் பாகம்தான் உங்களுக்குப் பிள்ளை இருந்தால், அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம்தான் (இதுவும்) நீங்கள் செய்திருக்கும் மரண சாஸனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னரேதான் தந்தை, பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ, பிள்ளை, பேரன் போன்ற பின் வாரிசுகளோ இல்லாத ஒர் ஆணோ, ஒரு பெண்ணோ - இவர்களுக்கு ஒரு சகோதரனோ, சகோதரியோ இருந்தால் - அவர்கள் ஒவ்வொருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு. ஆனால், இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும - (இதுவும்) அவர்களின் மரண சாஸனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர்தான். ஆனால், (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். இன்னும், அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும் மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கிறான்.

இவை அல்லாஹ்வின்வரையறைகளாகும். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களை அவன் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வான். அதன் கீழே ஆறுகள் சதா ஓடிக்கொண்டிருக்கும். அவர்கள் அங்கே நிரந்தரமாக இருப்பார்கள். இதுவே மகத்தான வெற்றியாகும்.

எவன் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் மாறு செய்கிறானோ, இன்னும், அவன் விதித்துள்ள வரம்புகளை மீறுகிறானோ அவனை நரகில் புகுத்துவான் அவன் அங்கு (நிரந்தரமாக) தங்கி விடுவான். மேலும், அவனுக்கு இழிவான வேதனையுண்டு. (அல்குர்ஆன் 4: 12-14)

(அன்றியும்,) அவர்கள் பெருமை அடித்தவர்களாக பூமியில் தீமைகளைத் செய்யவும் சூழ்ச்சி செய்தார்கள். ஆனால், தீமைகள் செய்வதற்கான சூழ்ச்சி செய்த)வர்களைத் தவிர வேறெவரையும் சூழ்ந்து கொள்ளாது் இவர்களுக்கு முன் சென்றோர் (இறைவனுக்குமாறு செய்து தண்டனை பெற்ற) வழியைத்தான் இவர்களும் எதிர் பார்க்கிறார்களா? அப்படியாயின், அல்லாஹ்வின் அவ்வழியில் (அதாவது, பாவம் செய்தோர் தண்டனை பெறுதலில்) யாதொரு மாற்றத்தையும் நீர் காணமாட்டீர் அல்லாஹ்வின் (அவ்) வழியில் திருப்புதலையும் நீர் காணமாட்டீர். (அல்குர்ஆன் 35:43)

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க(க் கருது) கின்றனர். எனினும் அவனோ அவர்களை வஞ்சித்து விடுகிறான்...... (அல்குர்ஆன் 4:142)

குடும்பப் பொறுப்பில்லாது, உழைப்புமில்லாது பிறரை நம்பி வாழ்பவனும், பிறருக்குச் சதி செய்பவனும், பிறரை வஞ்சித்து வாழ்பவனும், உலோபியும், பொய்யனும் நரகவாதிகளாவர் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நூல்: முஸ்லிம்

இறை நம்பிக்கையாளர்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் ஏனெனில், நிச்சயமாக எண்ணங்களில் சிலபாவங்களாக (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். மேலும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன் மிக்க கிருபை செய்பவன். (அல்குர்ஆன் 49:12)

இன்னும், முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும், முதலாவதாக (நம்பிக்கை கொள்வதில்) முந்திக் கொண்டவர்களும், அவர்களை (எல்லாம்) நற்கருமங்களிலும், பின் தொடர்ந்தவர்களும் இருக்கிறார்களோ அவர்களின் மீது அல்லாஹ் திருப்தி அடைகிறான் அவர்களும் அவனிடம் திருப்தியடைகிறார்கள். அன்றியும் அவர்களுக்காக, சுவர்க்கங்களைச் சித்தப்படுத்தியிருக்கிறான், அவற்றின்கீழே ஆறுகள் ஒடிக்கொண்டிருக்கும். அவர்கள் அங்கே நிரந்தரமாக தங்கியிருப்பார்கள் - இதுவே மகத்தான வெற்றியாகும். (அல்குர்ஆன் 9:100)

நிச்சயமாக அல்லாஹ் நபியையும் கஷ்ட காலத்தில் அவரைப் பின்பற்றிய முஹாஜிர்களையும், அன்ஸாரிகளையும் மன்னித்தான் - அவர்களில் ஒரு பிரிவினருடைய நெஞ்சங்கள் தடுமாறத் துவங்கிய பின்னர், அவர்களை மன்னித்(து அருள்புரிந்)தான் - நிச்சயமாக அவன் அவர்களின் மீது மிக்க கருணையும், கிருபையும் உடையவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 9:117)

இறை விசுவாசிகள் அந்த மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்தபோது மெய்யாகவே அல்லாஹ் அவர்களைப் பொருந்தி (ஏற்றுக்) கொண்டான் அவர்களின் இதயங்களில் இருப்பதை அவன் அறிந்து, அவர்களின் மீது (சாந்தியையும்) அமைதியை(யும்) இறக்கியருளி, அவர்களுக்கு அண்மையில் வெற்றியையும் அளித்தான். (அல்குர்ஆன் 48:18)

இறைநம்பிக்கைக் கொண்டு, தம் ஊரை விட்டு வெளியேறி, தம் செல்வங்களையும், உயிர்களையும், இறைவழியில் தியாகம் செய்தார்களே அவர்களும், இத்தகையோருக்குப் புகலிடம் கொடுத்து உதவியவர்களும். ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்கள் ஆவார்கள். இறைநம்பிக்கை கொண்டு, (இருந்தாலும், தம்) ஊரை விட்டு வெளியேறாதவர்கள் தங்களின் நாட்டைத் துறக்கும்வரை, அவர்களின் எவ்விஷயத்திலும் நீங்கள் பொறுப்பாளி அல்ல. எனினும், மார்க்க விஷயத்தில் உங்களிடம் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்திற்கு விரோதமாக அவர்களுக்கு (உதவி செய்தல்) கூடாது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு கவனித்துக் கொண்டே இருக்கிறான். (அல்குர்ஆன் 8:72)

அபூஸயீது குத்ரீ(ரலி) அவர்கள் மூலம்: என்னுடைய தோழர்களைத் தூஷிக்காதீர்கள்! உங்களில் ஒருவர் உஹத் மலையளவு தங்கத்தை (இஸ்லாத்திற்காக) செலவு செய்தாலும் அவர்கள் இடத்தைப் பிடிக்கவே முடியாது என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: புகாரீ, முஸ்லிம்)

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் மூலம்: என்னுடைய தோழர்களைப் பற்றி அல்லாஹ்வை அஞ்சுங்கள்! என் மரணத்தின் பின்னால் அவர்களை(த் தீய கருத்துடன்) எண்ணாதீர்கள். அவர்களை நேசித்தவன் என்னை நேசித்தவனாகவும், அவர்களை வெறுத்தவன் என்னை வெறுத்தவனாகவும், அவர்களுக்குத் தீங்கிழைத்தவன் எனக்குத் தீங்கிழைத்தவனாகவும் ஆகிறான். எவன் தீங்கிழைத்தானோ, அவன் அல்லாஹ்வுக்கு தீங்கிழைத்தவனாகிறான். எவன் அல்லாஹ்வுக்கு தீங்கிழைத்தானோ அவன் வேதனைக்கு நெருங்கி விடுவான் என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: திர்மிதீ)